பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.

மாலை 1	ஞாயிறு 13-11-38 வெகுதான்யஹு ஐப்பசிமீ 28உ	முத்து 7

பொருள் அடக்கம்

விஷயம்			பக்கம்
1.	கிராம சுய ஆட்சி	....	146
2.	கெமால் பாஷா மறைவு	...	148
3.	குறிப்பு	...	149
4.	போகிற போக்கில்	...	151
5.	கிராம புனருத்தாரணம் (ரா. குஞ்சிதபாதம்)	...	153
6.	பெரிய கருப்பன் கடிதம் (கொத்தமங்கலம் சுப்பு)	...	155
7.	கால சக்கரம் (டி. டி. கிருஷ்ணமாசாரி)	...	157
8.	அபேதவாதம் (கு. ப. ரா.)	...	159
9.	துணுக்குகள்	...	160
10.	புது அத்தியாயம் (கே. ஆர். சுப்பரத்தினம்)	...	161
11.	சிறுவர் பகுதி	...	165
12.	தமிழ்ப்படம் வேண்டும் (வே. சு. ரா.)	...	167

"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் கதைகளெல்லாம் கற்பனைப் பெயர்கள். ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.



கிராம சுய ஆட்சி

கிராமப் பஞ்சாயத்துகளை மறுபடியும் உயிர்ப்பித்து, கிராம பரிபாலனத்தில் பூரண சுதந்திரம் அளித்து, மாகாண சுய ஆட்சியைப் போல, கிராம சுய ஆட்சியையும் ஏற்படுத்தவேண்டுமென்று காங்கிரஸ் சர்க்கார் ஆலோசனை செய்துவருகிறார்கள். ரத்தம் செத்துப்போய் அயர்ந்து கிடக்கும் கிராமங்களுக்கு மறுபடியும் உயிர் ஊட்டுவதற்கான வழியில், விவசாயத்திற்கு அடுத்தபடியாக முக்கியத்துவம் வாய்ந்தது இந்த வேலை.

அது உருவாகிக்கொண்டிருக்கும் பூசைவேளையில் சென்னை மாகாண பஞ்சாயத்து யூனியன் ஒரு கரடியைவிட்டு ஓட்டுகிறது.

பஞ்சாயத்தின் நிர்வாக முறையில் இருக்கும் குறைகளைச் சரிகட்டவும், இனிமேல் புத்துயிர் வந்தபின் ஏற்படும் பொறுப்புகளைச் சரிவர நிறைவேற்றுவதற்காகவும் பஞ்சாயத்து யூனியன்கள் என்ற ஸ்தாபனங்களைத் திரும்பவும் அமைக்கவேண்டுமென்று அது சர்க்காருக்கு ஒரு யாதாஸ்து சமர்ப்பித்திருக்கிறது.

பல பஞ்சாயத்துகளின் கையிருப்புப் பணம் செலவிட முடியாமல் அப்படியே கிடக்கிறதாம். மராமத்துகள் செய்யவோ அல்லது வேறு புதுவேலைகள் செய்யவோ பஞ்சாயத்துகளுக்கு எஸ்டிமேட்டு (செலவு திட்டம்) இல்லாமல் முடியாது. எஸ்டிமேட்டு தயார்செய்து கொடுக்க பஞ்சாயத்தின் கீழ் ஓவர்சீயர் கிடையாது. ஒரு பஞ்சாயத்து தனியாக ஒரு ஓவர்சீயர் வைத்துக்கொள்ளவும் முடியாது. ஆகையால் பல பஞ்சாயத்துகள் சேர்ந்து ஒரு யூனியனாகி பொதுவில் ஓவர்சியர், சூபர்வைசர் முதலிய உத்தியோகஸ்தர்களை நியமித்துக் கொண்டால் பஞ்சாயத்துகள் சர்க்கார் உதவியை எதிர்பாராமல் தாமாகவே காரியத்தை செய்து கொள்ளலாம், சர்க்காருக்கு மதுவிலக்கு முதலியவைகளால் இப்போது 'செலவு சமயமாக' இருக்கிறது; அவர்கள் கையை பஞ்சாயத்துகள் எதிர்பார்ப்பது உபயோகமில்லை; ஆகையால் சர்க்கார் பஞ்சாயத்து மசோதாவைக் கொண்டுவருவதற்குப் பூர்வாங்கமாகவே இந்தப் பஞ்சாயத்து யூனியன்களை அமைத்துவிடவேண்டும். இதுதான் யாதாஸ்தின் கோரிக்கை.

இது மிகவும் விபரீதமான கோரிக்கையாய் இருக்கிறது. பஞ்சாயத்துகளுக்கே இனிமேல் தான் உயிரும் சுதந்திரமும் ஏற்படப் போகின்றன. அப்படியிருக்க அதற்குமுன்னால் சர்க்கார் திட்டமே அமுலுக்குவராதபொழுது, இந்தயூனியன்களைமட்டும் நிறுவிவிடவேண்டுமென்பது முதலாவதாக அர்த்தமில்லாமல் இருக்கிறது.

மேலும் இந்த யூனியன்கள் ஒருக்காலும் சரியாக வேலைசெய்ய மாட்டா என்பதில் சந்தேகமில்லை. பஞ்சாயத்துகள், பாவம், பொருக்கிப் பிணைத்துச் சேர்க்கும் பணத்தை இவை கபளீகரம் செய்துவிட்டுப் போய்விடும். வேலை சரியாகவும் நடக்காது, துரிதமாகவும் நடக்காது. பணச்செலவுதான் மிச்சமாகும். யூனியன்கள் என்ற ஸ்தாபனங்களை ஏற்படுத்தினால் அப்பேர்ப்பட்ட சங்கங்களைத் தொடர்ந்துவரும் ஊழல்கள் பல. அவை ஒருபுரமிருக்கட்டும். நிர்வாகச் செலவு பஞ்சாயத்தின் வருமானத்தில் சரியாகக் கைவைத்துவிடும்.

பஞ்சாயத்தின் எஸ்டிமேட்டுகளை சர்க்காரே தயார் செய்து கொடுக்கலாம்; கொடுக்கவேண்டும். பஞ்சாயத்தின் வருமானத்தில் ஒரு பாகமான செஸ்ஸை சர்க்கார் வசூல்செய்து கொடுக்கவில்லையா? அதன் சொத்தை நிர்ணயித்துக் கொடுக்கவில்லையா? ஒரு தாலூகாவில் ஒரு வருஷத்தில் எவ்வளவு பஞ்சாயத்து எஸ்டிமேட்டுகள் இருந்துவிடப் போகின்றன? இந்தவேலையைச் செய்ய யூனியன்கள் ஏற்படுத்தினால் கர்சைக்கொடுத்துத் தேளைக் கொட்டிக்கொள்வதுபோலத்தான். எஸ்டிமேட்டை ஓவர்சீயர் தானா தயாரிக்கவேண்டும்? நம்மைக் கேட்டால் கிராமத்திலிருக்கும் மேஸ்திரி அதை அழகாகவும், துரிதமாகவும், சிக்கனமாகவும் தயாரித்து விடுவார்.

ஜில்லாபோர்டு என்ற 'இரண்டுங் கெட்டான்' ஸ்தாபனமே ஒழிய வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். அதைப்போல வேலையற்ற ஸ்தாபனங்களை மேலும் சிருஷ்டிசெய்துகொண்டு போவதா?

இக்ஷிணி தேவதையை மந்திரத்தின் மூலம் வசீகரம் செய்துவிட்டால், அதற்கு வேலைகொடுத்துக்கொண்டே இருக்கவேண்டுமாம். "வேலைகொடு, வேலைகொடு. இல்லாவிட்டால் உன்னையே விழுங்கி விடுவேன்" என்று சொல்லுமாம் அந்தப் பூதம். அதுபோலத்தான் இந்த மாதிரி ஸ்தாபனமும். உயிர்வார்த்து வெளியில் விட்டுவிட்டால் வேலை கொடுத்துக்கொண்டே இருக்கவேண்டும். இல்லாவிட்டால் எல்லாவற்றையும் விழுங்கிவிடும்.

இல்லை, இந்தப் பஞ்சாயத்து யூனியன்கள் கூடவே கூடாது. பஞ்சாயத்து மசோதா தயார் செய்யும்பொழுது சர்க்கார் பஞ்சாயத்து தன் வேலைதிட்டத்தைத் தானே தயாரித்துக்கொள்வதற்கும் நிறைவேற்றிக் கொள்வதற்கும் அதற்கு அதிகாரம் கொடுத்துவிடவேண்டும். கிராம சுய ஆட்சி என்பது உண்மையிலேயே ஏற்படும்படி விதிகளை இயற்ற வேண்டும். கிராமவேலையைக் கிராமத்திலேயே, கிராமத்தாரே திட்டம் போட்டு, கிராமத்தாரே செய்து முடிக்கட்டும். பஞ்சாயத்தே அதற்கு பூரண அதிகாரம் பெறட்டும். வேற்றூளோ, சங்கமோ தலையிடவேண்டாம். கிராம சுய ஆட்சி திட்டத்தில் அதுதான் பொருத்தமாக இருக்கும்.

பொதுவாக, பஞ்சாயத்துகளைச் சீர்திருத்தி அமைக்கும்பொழுதே சர்க்கார் பஞ்சாயத்துகள் விஷயத்தில், ஊழல்கள் நுழைய இடமின்றிக் கூடியவரையில் சட்டத்தை அமைப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

கெமால் பாஷா மறைவு

நவீன துருக்கியின் மூல புருஷனுன கெமால் பாஷா இறந்துவிட்டார். இறக்கும்பொழுது அவருக்கு வயது ஐம்பத்தி எட்டு. இருபது வருஷத்தில் ஒரு தேசத்துக்கே புத்துயிர் அளித்து பெரும் வல்லரசாகச் செய்தது கெமால் ஆக்கிய அற்புதம்.

மகா யுத்தத்தின்போது முஸ்தாபா கெமால் பாஷாவின் வீரசரிதை ஆரம்பமாயிற்று. யுத்தத்தில் நிகரற்ற போர் வீரன் என்பதை நிரூபித்து, துருக்கிக்கு சென்ற விடமெல்லாம் வெற்றி கொண்டுவந்தார்.

துருக்கி அரசாங்கத்தின் தலைவரான பிறகு, தான் ஒரு தலைசிறந்த ராஜதந்திரி என்பதையும் காட்டிக்கொண்டார். அடிமைத்தனத்திலும் மூடப் பழக்க வழக்கங்களிலும் அழுந்திக் கிடந்த துருக்கி ஜாதியினரை சில வருஷங்களில் சட்டத்தின் பலாத்காரத்தால் மேல்நாட்டு நாகரிக சிகரத்தை அடையும்படி செய்தார்.

துருக்கிக் குடியரசு 1923-ம் வருஷத்தில் ஸ்தாபனமாயிற்று; கெமால் அதன் முதல் தலைவர்; உண்மையில் அவர் சர்வாதிகாரியானுர். அவர் தன் பதவி காலத்தில் பல தீவிரமான சீர்திருத்தங்களைச் செய்தார்; பல மனைவிகள் கொள்ளும் வழக்கத்தை ஒழித்தார்; பர்தாவைத் தடுத்தார். அராபிக் லிபியை மாற்றி ரோமன் எழுத்தை நாட்டில் ஏற்படுத்தினுர். பெண்களுக்கு சம உரிமை அளித்தார். மகம்மதிய மதத்தின் சின்னங்கள் சிலவற்றையே அகற்றினுர்.

மதப் பற்றும் ஆசாரப் பற்றும் கொண்ட ஒரு நாட்டில் இப்பேர்ப்பட்ட புரட்சிகரமான சீர்திருத்தங்களைக் கொண்டு வருவது எந்த ராஜதந்திரிக்கும் எளிதல்ல; கெமால் இவ்வளவையும் செய்து முடித்தார் என்பது அவருடைய செல்வாக்கையும், தைரியத்தையும், விடா முயற்சியையும் காட்டுகிறது.

தன்னலமற்ற ஒரே மனிதன் ஒரு நாட்டின் நன்மதிப்பைப் பெற்று அதை எப்பேர்ப்பட்ட நிலையிலிருந்தாலும் சீர்படச் செய்து விடலாம் என்பதற்கு சரித்திரத்தில் கெமாலின் சரிதை ஒரு அத்தாட்சி. ஒரு நாட்டின் தேவைகளுக்கேற்ற செயல் சக்தி கொண்ட கர்ம வீரன் அதை அவசியம் கடைத்தேறச் செய்துவிடலாமென்பதும் துருக்கியின் முன்னேற்றத்திலிருந்து விளங்குகிறது. சொல்லப்போனுல் ஜனசமூகத்தின் வாக்குபெற்ற ஒரு மனிதன் தான் எந்த விதமான தீவிர மாறுதலையும் உண்டாக்க முடியும்.

அடாடர்க் ஒரு முறையில் நெப்போலியனுக்கு ஒப்பிடக்கூடிய சக்திகள் பெற்றவர் என்று சொல்லலாம்'

ஆனுல் இந்தத் தீரர்கள் சரித்திரத்தில் தோன்றி மறைவதில் ஒரு சிரமம் இருக்கிறது. அடுத்தாற்போல வரும் தலைவர்கள் அவர்களுடைய உன்னத பாதையில் போவதற்கு முடிவதில்லை. அவர்களுடைய செயலைக் 'கொண்டு செலுத்த' முடிவதில்லை; லட்சியத்தை வகித்து நடத்த முடிகிறதில்லை. அந்த மலைபோன்ற மேன்மைக்கு அடுத்தாற்போல ஒரு மடுபோன்ற தாழ்வில் நிற்கிறுர்கள்.

ஆனுல் நாட்டில் தேவை தவிப்பாக மாறினுல் தலைவன் தானுகவே உற்பத்தியாகிறுன்.

கெமாலின் சிருஷ்டி நிலைபெற்றுவிட்டது; ஆகையால் துருக்கிக்குப் பயமில்லை.

குறிப்பு

அரிசிக்குப் பாதுகாப்பு

நவம்பர் மாதம் 2-ம் தேதி குத்தாலத்தில் நடந்த தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியில் ஸ்ரீ க. சந்தானத்தின் பிரேரணையின் பேரில் ஒரு முக்கியமான தீர்மானம் நிறைவேறிற்று.

இப்பொழுது தென் இந்தியாவில் விவசாயிகளுக்கு இருக்கும் பெரிய குறை நெல் விலை மிகவும் மந்தமாக இருப்பது தான். நெல்விலை சரியாயில்லாததால் வரிபளுவும் அதிகமாகத் தோன்றுகிறது; நிலங்களுக்கும் கிராக்கி குறைந்து விட்டது. இதற்கு முக்கியமான காரணம் தென் இந்தியாவில் இறக்குமதி யாகும் பர்மா அரிசி தான். அதனால்தான் நமது அரிசிக்கு விற்பனை குறைந்து விட்டது. பர்மாவிலிருந்து நெல்லும் அரிசியும் இங்கே வந்து குவிவதைத் தடுத்தால்தான் நமது அரிசிக்கு கதிமோக்ஷமுண்டு. அப்பொழுதுதான் உள்நாட்டு அரிசி வியாபாரமாகும். நெல்விலை ஏறும்; தென்னாட்டின் பொருளாதார நிலை கொஞ்சம் நேரடையும். விவசாயிக்கு இந்த உதவியைச் சர்க்கார் உடனே செய்யாவிட்டால் கிராமங்களில் சிரமம் இன்னும் அதிகமாகும்.

இதை உத்தேசித்துத்தான் ஸ்ரீ சந்தானம் பர்மாவிலிருந்து இறக்குமதியாகும் நெல் அரிசிகளுக்கு சரியான வரிகள் போட்டு உள்நாட்டுச் சரக்குக்கு பாதுகாப்பு அளிக்கும்படியாக மத்திய சர்க்காருக்கு உடனே சென்னை சர்க்கார் வற்புறுத்திக் கூற வேண்டுமென்று தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார். அதைக் கமிட்டி நிறைவேற்றி விட்டது.

சென்னை சர்க்கார் உடனே நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டால் மத்திய சர்க்கார் பர்மாவுடன் வியாபார ஒப்பந்தம் செய்யும் பொழுது, இதற்கு வழி செய்யவேண்டுமென்று வற்புறுத்தினால், விவசாயிகளுக்குப் பெரும் நன்மையாக இருக்கும். நிலவரிச் சுமையைச் சிறிது காலம் தாங்குவதற்கு கொஞ்சமாவது பலம் ஏற்படும்.

பர்மாவிலிருந்து வரும் சரக்கின் அளவுக்கு ஒரு கட்டுப்பாடோ அல்லது தகுந்த இறக்குமதி வரியோ விதிக்க வேண்டுமென்று தீர்மானத்தில் கண்டிருக்கிறது.

பத்திரிகைத் தொழில்

தென் ஆர்க்காடு ஜில்லா பத்திரிகாசிரியர்கள் சங்கத்தில், பிரசித்திபெற்ற பத்திரிகாசிரியர் ஸ்ரீ கே. நடராஜன் பத்திரிகைத் தொழிலைப்பற்றி ஒரு பிரசங்கம் செய்தார். அந்த சமயம் ஸ்ரீ சீனிவாஸ சாஸ்திரி தலைமை வகித்தார்.

பத்திரிகைத் தொழிலில் வரும்படி கிடையாதென்றும், வேலைமட்டும் மிகவும் கடினம் என்றும் கூறிவிட்டு, ஸ்ரீ நடராஜன் தொழிலின் மேன்மையைப் பற்றி வெகு உணர்ச்சியுடன் பேசினார். "எல்லாத் தொழில்களுக்கும் மேலானது பத்திரிகைத் தொழில். பத்திரிகாசிரியர்கள் உலகப்போக்கைக் கவனமாக ஆராய்ந்து கொண்டிருக்க வேண்டும். அரசியல், பொருளாதாரம், சரித்திரம் இவைகளில் அவர்களுக்கு நல்ல பிரக்ஞை இருக்க வேண்டும்" என்று நடராஜன் கூறினார்.

ஸ்ரீ சீனிவாச சாஸ்திரி பேசுகையில் பத்திரிகாசிரியர்கள் சேர்ந்து பத்திரிகைத் தொழில் பயிற்சிக்கு ஒரு கலாசாலை ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னார். இந்தியப் பத்திரிகாசிரியர்கள் தற்காலம் இருப்பது போல இருந்தால் இந்தியாவுக்கு மிகவும் கெடுதல் என்றும் எச்சரிகை செய்தார்.

பத்திரிகைத் தொழிலும் உபாத்தியாயர்கள் தொழிலைப் போன்று மிகவும் உன்னதமான தொழில்தான். இரண்டும் ஒரு முறையில் கல்வி புகட்டும் தொழில்கள் என்று சொல்லி விடலாம்; ஆனால் பத்திரிகாசிரியர் அறிவூட்டும் வகையும் உபாத்தியாயர் அறிவூட்டும் வகையும் வேறு. பத்திரிகாசிரியரின் தொழிலில் பொறுப்பு அதிகம். ஆபத்து அதிகம். உபாத்தியாயர்கள், கற்கண்டுபோல, நிர்த்தாரணமான அறிவை விளக்கிப் புகட்டுகிறார்கள். பத்திரிகாசிரியர் ஆலையில் அறிவு கரும்புப் பாலாக ஓடிக்கொண்டிருக்கும் பொழுதே அதன் மாறுதல்களை ஆராய்ந்து பாகின் நிலைமையை அப்பொழுதப் பொழுது கூறுகிறார்.

ஆனால் தற்காலம் பத்திரிகைத் தொழில் வெறும் கட்சிப் பிரசாரமாக இருக்கிறதை எங்கும் காண்கிறோம். உண்மையை உள்ளபடியே கூற பத்திரிகாசிரியருக்கு உரிமை இல்லை சில இடங்களில். பல இடங்களில் முடிகிறதில்லை. நிலைமைகளை விமரிசனம் செய்வதில் மட்டு

மல்ல, செய்திகளைக் கொடுப்பதில் கூடப் பத்திரிகைகள் கட்சியுணர்ச்சியுடன் வேலை செய்கின்றன.

பட்சபாதமின்றி, தைரியமாக உண்மையை உரைக்கும் பத்திரிகாசிரியர் தொழிலின் லட்சியத்தைக் காப்பாற்றுகிறவர் ஆவர்.

சமஸ்தானங்களில் விழிப்பு

நாடெங்கும், சமஸ்தானங்கள் தூங்கிக் கொண்டிருந்த காலம் போய் விழிப்பு நேரம் வந்து விட்டது. பிரிட்டிஷ் இந்தியாவில் மாகாண சுயஆட்சி என்று ஏதோவொன்று தோன்றி அதில் மக்களின் பெருவாரியான செல்வாக்கு பெற்ற காங்கிரஸ்காரர்கள் பல மாகாணங்களில் நிர்வாகம் நடத்துவது சமஸ்தானப் பிரஜைகளின் விழிப்பிற்கு முக்கியமான காரணம். வரப்போகிற சமஷ்டியில் தாங்களும் சுதந்திரம் கொண்டப் பிரஜைகளாய்ச் சேரவேண்டுமென்று ஆவல் ஏற்பட்டு சமஸ்தானப் பிரஜைகள் எங்கும் பெரும் சுதந்திரதாகங் கொண்டு கிளர்ச்சி செய்ய ஆரம்பித்து விட்டார்கள். சில பெரிய சமஸ்தானங்களில் அடக்குமுறை நடக்கிறது; சில சமஸ்தானங்களில் பிரஜைகள் மகாநாடுகள் கூட்டி பொறுப்பாட்சி கேட்கிறார்கள். ராஜ்கோட், பரோடா சமஸ்தானங்களில் நடக்கும் கிளர்ச்சிகளைக் கண்டு சிறிய சமஸ்தானப் பிரஜைகளும் விழித்தெழுந்து விட்டார்கள்.

பெரிய சமஸ்தானாதிபதிகள் ஜனங்களின் சுதந்திர வாஞ்சையைத் திருப்தி செய்யத் தயங்கும் பொழுது சில சில்லரை சமஸ்தானாதிபதிகள் தைரியமாக முன்வந்து தமது மக்களுக்குப் பொறுப்பாட்சி அளிப்பதாகக் கூறுவது மிகவும் போற்றத்தக்கதாய் இருக்கிறது. அவுண்ட் என்னும் சிறிய சமஸ்தானாதிபதி தன் பிரதேசத்தில் ஏற்கனவே இருக்கும் சுய ஆட்சி முறையில் ஜனப்பிரதிநிதித்துவத்தை அதிமாக்கி திவானையும் மந்திரிகளையும் சட்டசபைக்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்புடையவர்களாக்கத் தீர்மானித்திருக்கிறார். ரதன்பூர் நவாப் தன் சமஸ்தானத்தில் முழுப் பொறுப்பாட்சியைத் தொடங்கத் தீர்மானம் செய்து விட்டார். ஜுனகாட், தரங்கதரா முதலிய சில சிறு சமஸ்தானாதிபதிகளும் இதேமாதிரியாக முன்வருகிறார்கள் என்றால், திடீரென்று ஏற்பட்ட இந்தப் புரட்சி மனபான்மைக்குக் காலம்தானே காரணம் என்று சொல்லவேண்டும்?

குண்டு வீச்சு

சிறிதுகாலத்திற்குள் ஜெர்மனியே விமானக் குண்டு வீச்சை எல்லோரும் நிறுத்தி விடலாம் என்று பிரேரணை செய்யலாம் என்று சமீபத்தில் காமன்ஸ் சபையில் நடந்த விவாதத்தின் நடுவில் ஸர் எட்வர்ட் கிரிக்ஸ் சொன்னார். சுய நலத்தை உத்தேசித்தே ஜெர்மனி அவ்விதம் செய்கிறதாம். விமானக் குண்டு வீச்சால் ஐரோப்பாவில் சேதம் ஏற்பட்டால் அது ஜெர்மனிக்குத்தான் அதிக பாகதமாக இருக்குமென்பதுதான் காரணம்.

எந்தக் காரணத்தைக் கொண்டாவது மேல் நாட்டாரிடையே இப்படி ஏதாவது ஞானோதயம் ஏற்படுமா? போர் என்ற பெயர் கொண்டு பிரஜைகளைப் படுகொலை செய்யும் குண்டுவீச்சை நிறுத்துவார்களா? போரையே நிறுத்துவதைப் பற்றிய பேச்சு இருக்கட்டும். ஆயுத பரிகாரணப் பேச்சும் இருக்கட்டும். போரை மேல் நாட்டார் போர் என்ற அர்த்தம் கொள்ளும்படியாகவாவது செய்வார்களா? அஸ்திரப் பிரயோகங்களை சைனியத்தோடும் கடற்படையோடும் நிறுத்திக் கொள்வார்களா? அல்லது விமானப்போர் செய்ய வேண்டுமானால் விமானம் விமானத்தைத் தாக்குவதுடன் நிற்பார்களா?

நாகரிகத்தின் சின்னங்களாகிய கட்டடங்களையும் கலாசாலைகளையும் நகரங்களையும் தரைமட்டமாக்காமல், ஒரு பாவமும் அறியாத பொதுமக்களை ஊர் ஊராக நாசம் செய்யாமல் இருப்பார்களா?

மிருக பலத்தில் மிதமிஞ்சிய இறுமாப்பு கொண்ட ஜெர்மனியே இப்படியொரு யோசனை கூறுவதென்றால் உலகத்திற்கு ஏதோ நல்லகாலம் பிறக்கிறாற் போல இருக்கிறது. ஆனால் அதற்குள் ஒன்றும் சொல்வதற்கில்லை. யுத்தம் யுத்த வீரர்களுடன் நிற்க வேண்டுமென்று நிலைமை வந்தால் கூட இப்பொழுது போதும்போலிருக்கிறது!

போகிற போக்கில்



போகிற போக்கில் எழுதலாமென்று கதவுகளைச் சாத்திக்கொண்டு, ரயில் பிரயாணத்தின் ஆயாசத்தையும் மறந்து, வந்ததும் வராததுமாக காலையில் உட்கார்ந்து பென்ஸிலைக் கையிலெடுத்தேன்—ஆசிரியர்கள் பேனாவைப் பிடித்து எழுதுகிறதில்லை. வர்ணனைக்குத் தான் விரலெல்லாம் மைக்கோலமிட்டு என்று சொல்வது வழக்கம். மட்டு மரியாதை அன்னியில், நாகலாபுரம் திவிட்டிக் கொள்ளைக்காரர்கள் கதவை உடைப்பதுபோல், உடனே ஒரு சப்தம் கேட்டது. 'போகிற போக்கில்' தான் என்று உருமிக்கொண்டு கதவைத் திறந்தேன். என் நண்பர் பழைய 'பெருச்சாளி' கோபு என் எதிரில் நின்றார். காலை ஆறு மணியாயிருந்தாலும் அவர் தலையை அழகாய் வாரிக்கொண்டு கதர் ஜிப்பாவின்மேல் ஓர் 'டுவீட்' கோடி அணிந்து நலங்கிற்கு வரும் மாப்பிள்ளை போல் வந்து நின்றார். நானோ அப்பொழுது தான் ரயிலிலிருந்து வந்து இறங்கியிருந்தேன். பல் கூட தேய்க்கவில்லை. ஆசிரியர்களுக்குப் பல் துலக்க ஒழிவேது?—அதுவும் புதுப்பட்டம் வகித்தவர்களுக்கு?

* * *

உண்மையிலேயே கோபு ஓர் பழைய பெருச்சாளிதான். நகரவாசம் என்ற இலவசமான மகசூலில் பெருச்சாளி போலவே தின்று கொழுத்து வளர்ந்தவன். பூர்வீகம் கும்பகோணமாயிருந்தாலும் அவன் தகப்பனார் காலத்திலேயே அவன் சென்னைக்கு வந்துவிட்டான். அவரோ பிராமண சம்பிரதாயத்தையே ஒட்டி ஓர் காபி கிளப் வைத்து நகரவாசியானார். காலக்கிரமத்தில் நஷ்டமடைந்தார். அதாவது அவருக்கு பால் போட்டவர்கள் காப்பிக்கொட்டை வகையரா சாமான்கள் கடனுக்குக் கொடுத்தவர்கள் எல்லோரும் நஷ்டமடைந்தார்கள். ஆனால் இந்த கதி அடைவதற்கு முந்தி 15 வருஷ காலம் காபி கிளப் வியாபாரம் நன்றாய் நடந்தது. அப்பொழுது கோபுவிற்கு தக்க வாலிபம். "காபி கிளப் லாபத்தில்" கோபு செல்லப் பிள்ளையாய் 'டயர்' போட்ட ரிக்ஷாவில் ஏறிப் பள்ளிக்கூடம் போய் வந்தான். புஸ்தகத்திற்கும் நோட்புக்குக்கும் பிரைவேட் உபாத்தியாயருக்கும் குறைவேயில்லை. ஜிலேபிக்குக் கேட்கவேண்டுமா? அது கைவசமிருக்கும் வரையில் சிநேகிதர்களுக்கும் கேட்பானேன்? ஆனால் கடைசியாக கோபுவின் படிப்புத் திறமை குறைவு தான். வெளியூராயிருந்தால் மெட்ரிகுலேஷன் பாஸ் ஆயிராது. சென்னையின் படிப்பின் மகிமை என்னவென்றால் எவ்வளவு மக்காயிருந்தாலும் குறைந்தபக்ஷம் S. S. L. C. யாவது பாஸ் பண்ணி விடலாம். அப்படியே கோபுவும் பாஸ் செய்துவிட்டு 'கிரிஸ்டியன்' காலேஜில் வந்து சேர்ந்தான், நானும் அங்கேயே அந்த வருஷம் தட்டுக்கிட்டுப் போய்ச் சேர்ந்தேன். கோபுவுக்கு என்னிடத்தில் மிகவும் அன்பு. எனக்கும் நல்ல ஆடைகளணிந்த அசட்டைக் கண்டால் கொஞ்சம் பிரியமுண்டு. இந்தப் பழைய சினேகிதனை நான் காலேஜ் விட்ட பிறகு 20 வருஷ காலமாய்ப் பார்க்கவில்லை. அவன் அன்று என்னை ஜன்னல் வழியாய்ப் பார்த்ததும் அவனுக்குச் சந்தோஷம் தாங்கவில்லையாம். அதனால் தான் கதவுகளைக் கொள்ளைக்காரன்போல் உடைத்தான்.

* * *

"என்ன ரமணி, துலாஸ்னானம் செய்துகொண்டு மாயவரத்தில் உன் ஆச்ரமத்தில் ஆனந்தமாயிருக்கிறாயென்றல்லவோ நினைத்தேன்? நீயும் என்னைப்போலவே இந்த சென்னையில் கஷ்டபபட்டுக்கொண்டு இருக்கிறாய் போலிருக்கிறதே?"

"என்ன, கோபுவா! பார்த்து ரொம்ப நாளாய் விட்டது. உட்காரு. அதே 'ஜோர்' மனுஷ்யனாய்த்தான் இன்னும் இருக்கிறாய்."

"உன்னைப்போல் சிநேகிதர்கள் இருக்கிற வரையில் எனக்கென்ன குறைவு?"

"நான் மாயவரம் போய் துலாஸ்னானம் செய்தேனென்று உனக்கெப்படி தெரியும்?"

"எப்படித் தெரியுமா!—எழுதப் படிக்கத் தெரிந்ததைக் கூட மறந்துவிட்டேனா? அல்

லது உன்னையும் மறந்துவிட்டேனா? உன் "பாரதமணியை" பார்க்காதவன் யார்? ஆனால் உன்னை இப்பொழுது இங்கு பார்த்தால் காவேரியில் துலாஸ்னானம் செய்தவனாய்த் தோன்றவில்லையே! அதையும் ஓர் கட்டுரையாய் வீட்டில் உட்கார்ந்தே எழுதிவிட்டாயோ?"

"செச்செ, இல்லையப்பா, உண்மையில் போயிருந்தேன். என் கதர் ஷர்ட்டைப் பார். ஒரு நிலக்கரித் தூள் கூட நான் வழியில் விடவில்லை. கண்ணிலும், காதிலும், சட்டையிலும், இப்பொழுது தான் ரயிலை விட்டு இறங்கினேன். இன்றைய தினம் "பிரஸ்டே". அரை மணிக்குள் இரண்டு பக்கம் 'ரொப்ப' வேண்டும். இல்லாவிட்டால்—"

"போகட்டும், துலாஸ்னானம் பண்ணினாயே, அதன் பலன் என்ன? யாருக்கு என்ன லாபம், சொல். இந்தக் குளிரில் ஜலத்தில் கையை எப்படி வைத்தாய்?"

கோபு பக்கா நகரவாசி. சென்னையில் பழம் தின்று கொட்டை போட்டவன். எந்த கஷ்டத்திலும் வென்னீரில் ஸ்னானம் செய்தவன். கிராமம் என்றால் மூன்று தும்பல் தும்புவான்.

"துலாஸ்னான பலனா? அதைப்பற்றித் தான் நானும் ரயிலில் யோசித்துக்கொண்டு வந்தேன். நமது நாட்டில் எது செய்தாலும் பலனில்லையே! நெற்றி வியர்வை சொட்டக் கையால் வேலை செய்தாலும் சரி; கோவிலில் கும்பிட்டாலும் சரி, நீரில் வேண்டினாலும் சரி.—" கொஞ்சம் யோசித்து,—

"ஆனால், கோபு, ஒரு பலனடைந்தோம் என்று சொல்லலாம். 3 நாள் துலாஸ்நானம் செய்தேன். முதல் நாள் குருவை நெல் விலை கலம் ஒன்றுக்கு ரூ. 1-3-3 வீதம் விற்றது. மூன்றாம் நாள் ஸ்னானம் செய்து கரையேறி விலை விசாரித்தேன்—ரூ. 1-4-0. முழுக்கு போடும்போதெல்லாம், நான் சொல்ப மிராசுதாராயிருந்தாலும், நெல் விலையையே நினைத்து ஸ்னானம் செய்தேன். அதற்கு பலன் ஒரு நாள் முழுக்குக்கு காலணா வீதம் நெல் விலையேறியிருக்கிறதே. காவேரியம்மன் மகிமையே, மகிமை."

"ரொம்ப சந்தோஷம், ரமணி, ஆனாலும், நீ வரவர ரொம்பவும் கட்டுப் பொட்டியாய் போய் விட்டாயே. எனக்கும் அவசரம் தான் போகவேண்டும்."

"ஒரு கப் காபி சாப்பிட்டு விட்டுப் போயேன், கோபு" என்று சொன்னேன். ஆத்தில் ஒருவருமில்லை. ஆகையால் தைரியமாய்ச் சொன்னேன்.

"காபி வேண்டாம்—நீ துலாஸ்னானம் செய்தாயே. சாத்குண்யம் ஏதாவது கொடுத்தாயோ?"

"இல்லை, வழக்கமில்லை."

"அதுதான் கேட்டேன், உனக்குப் பூர்ண பலன் கிடையாது. இப்பொழுது ஒரு ரூபாய் கையிலிருந்தால் கொடு. என் தாத்தா பெரிய வைதீகம். 'தொட்டா' சாஸ்திரி. உனக்குத் தெரியுமே—மேலக்காவேரி, கும்பகோணம்."

உடனே டிராயரை இழுத்தேன். பேர் வழியை விட்டால் போதும் "போகிற போக்கில்" இந்த வாரம், வேண்டாமா? அது ஒரு ரூபாய் தானா பெறும்? டிராயரை இழுத்தேன். இரண்டரை ரூபாய், ஒரு அணா சில்லரையாக கொட்டிக் கிடந்தது—"பாரதமணி" மகசூல். கோபு கையில் துலாஸ்னான சாத்குண்யமாக 16 அணா கொடுத்தேன். வேண்டிக் கொண்டேன்—நெல் விலை இன்னம் கொஞ்சம் ஏற வேண்டுமென்று.

* * *

இந்த ஆழ்ந்த ஞாபகத்திற்கு காரணம் காவேரிக் கரையில் ஓர் பிச்சைக்காரனோடு எனக்கு நேர்ந்த சம்பாஷணை தான். "ஏன், ஐயா, வேலை செய்யக்கூடாது," என்று நான் அவனைக் கேட்டேன். "தயாராயிருக்கிறேன், சுவாமி. வேலைதானில்லை. நெல் விலை கலம் ஒன்றுக்கு ரூ. 1-3-0 விற்றால், ஈசனே, வேலை எங்கு கிடைக்கும்" என்றான். அவன் வார்த்தைகளை நினைத்துக்கொண்டே, குழந்தை போல் சுழலிட்டு வளைந்தோடி வரும் காவேரியில் ஸ்னானம் செய்தேன்.

* * *

நான் ஆநந்த யோசனையிலிருப்பதைப் பார்த்து என்னிடம் சொல்லிக்கொள்ளாமலேயே, சாத்குண்ய ரூபாய் கையில் கிடைத்த சந்தோஷத்தில் கோபு மறைந்து விட்டான். அந்த ரூபாய் காபி கிளப்பிற்கு தான் சாத்குண்யம் போகட்டும். நமது தேசத்தில் மாத்திரம் தான், உழைத்துப் பாடுபட்டு உண்டுபண்ணும் பண்டம் பாடிகள் தாழ்ந்த விலைக்கு விற்கிறதற்கு காரணம் என்ன? ஒரு வண்டி நெல் கொடுத்தால் தான் ஒரு கண்ணாடியும், சீப்பும், 'டிட்ஸ்' விளக்கும் கிடைக்கின்றன. இதை சீர்திருத்த வழி கிடையாதா? இதற்கென்ன காரணம்? என்று யோசித்து இந்த வாரம் எழுதலாமென்று ஆரம்பித்தேன். மறுபடியும் ஏதோ ஒரு நண்பர் கதவைத் தட்டி பிளக்கிறார், பார்க்கிறேன். அடுத்த பிரதியில் எனக்குச் சமயமும் மனசும் வந்தால் பார்ப்போம்.

—மணி

கிராமப் புனருத்தாரணம்

[ரா. குஞ்சிதபாதம்]

(தொடர்ச்சி)

ஆனால் வருஷக் கணக்கில் ஸ்தல ஸ்தாபனங்கள் தங்கள் கடமையைச் செய்யாமல் இருந்து விட்டதால் இன்று பல ரஸ்தாக்களில் பாதசாரியான பிரயாணிகளும் வண்டிகளும் கோடை காலத்தில் பிரயாணம் செய்வதே கஷ்டமாகப்போய் விட்டது. வருஷா வருஷம் சர்க்கார், ரஸ்தா பரிபாலனத்திற்காக லோகல்போர்டுகளுக்கு மானியங்கள் அளிக்கும்போது அவை மரங்கள் வைக்கவேண்டு மென்று கட்டாயப் படுத்த வேண்டும்.

நெல் சாகுபடியாகும் பிரதேசங்களில் கூட்டுறவு சங்கங்கள், ஊர்ப் பொதுவில் நல்ல விதைகள், உரங்கள், உழவு சாமான்கள் முதலியவைகளை வாங்குவதற்கு இன்றியமையாத சாதனங்களாக இருக்கும். அந்தந்தப் பிரதேசங்களில் பொதுவில் செய்யவேண்டிய குடி மராமத்து வேலைகளையும் அவை செய்யலாம். உதாரணமாக வாய்க்கால்களில் எக்கல் மண் எடுப்பது, பயிர்களுக்கு இடைஞ்சலான பூண்டுசெடிகளைப் பிடுங்குவது முதலான வேலைகளை அவை பொறுப்பாகச் செய்யலாம்.

புஞ்சை சாகுபடியாகும் பிரதேசங்களில் சிறு கைப்பற்றுகளை ஒன்று கூட்டிப் பொதுவாக சாகுபடிசெய்ய முயற்சி செய்யலாம். அநேக கிராமங்களில் சோளம் ராகி போன்ற புஞ்சைப் பயிர்கள் ஒரே போகமாக விளையும் பூமிகள் சேர்ந்தாற்போல 100 அல்லது 150 ஏகர்களாக இருக்கின்றன. அர்த்தாக்குகளில் பலருக்குச் சொந்தமான 300 அல்லது 400 வயல்கள் இருக்கலாம். ஒவ்வொன்றிற்கும் ஒரு சிறு கிணறும் வேலியும் இருக்கும். சொந்தக்காரன் ஏற்றமோ கவலையோ போட்டுத் தான் தண்ணீர் இரைப்பான். அந்தப் பூரா விஸ்தீரணத்தையும் கூட்டுறவு சங்கம் மூலம் ஒரு கிணற்றிலிருந்து 'பம்ப்' வைத்துப் பாய்ச்சி விடலாம். கடைசியாக கண்டு முதலாகும் விளைச்சலை விஸ்தீரணத்திற் கேற்றவாறு விகிதம் போட்டுப் பிரித்து விடலாம். இப்படியாக வேலை, மேற்பார்வை முதலியவைகளில் சிக்கனம் பிடிக்கலாம்.

கால் நடைகள் அபிவிருத்தி விஷயத்தில், அதிகமான மாடுகள் வேண்டுமென்பது மட்டுமல்ல; மாடுகளே இன்னும் தரமாக இருக்கவேண்டும். உபயோகமில்லாத பசுக்களை நீக்கி நல்ல கறவைப் பசுக்களையும் திறம்பட வேலை செய்யும் காளைகளையும் விருத்தி செய்யும் படியான ஜாதியாக பசுக்களைப் பொறுக்கி எடுக்க வேண்டும். வல்லத்தைப்போல் விவசாய வேலை இல்லாத இடங்களில் இருக்கும் ஜனங்கள் கால் நடை அபிவிருத்தியில் ஈடுபடலாம். ஆனால் எல்லாக் குடியானவர்களாலும் சிறந்த மாடுகளாக வாங்கமுடியாது. பசுவைத் தீவனம் போட்டு வைத்துக் கொண்டு கூட்டுறவு சங்கங்களுக்கு பால் விற்பது லாபம் என்பதைக் குடியானவன் கண்டுகொண்டால், நல்ல கறவைப் பசுக்களை விருத்தி செய்ய வேண்டுமென்று அவன் பசு சம்ரக்ஷணை ஜாக்கிரதையாகச் செய்வான். பால் வியாபாரம் செய்யும் சங்கங்கள் இரண்டு மூன்று கிராமங்களுக்கு ஒன்றாக ஏற்பட்டு நல்ல பாலை சேகரித்து விற்றால், கிராமாந்திரத்தின் பால் நகரங்களில் வெகு சுலபமாக விற்பனையாகும். அந்த சங்கங்கள் பாலை வாங்கி வெண்ணெயும் நெய்யும் நவீன முறைகளில் தயார் செய்யலாம். ஒரு மத்திய ஸ்தாபனத்தின் மூலம் சரக்குகளுக்குத் தரம் ஏற்படுத்தி அடையாளம் போட்டு விற்பனை ஏற்பாடு செய்யவேண்டும். மத்தியஸ்தாபனத்தின் முத்திரை சரக்குகள் சுத்தம் என்பதற்கு அத்தாட்சியாக இருக்கும்.

மாடுகளும் தீவனமும் வாங்குவதற்குப் பணம் தேவையானால், குடியானவர்கள் சங்கங்களுக்குப் பால் 'சப்ளை' செய்வதாக ஒப்பந்தம் செய்துகொண்டு கடன் பெற்றுக்கொள்ளலாம். கடன் தொகையில் ஒரு

பாகத்திற்குக்கொஞ்சம்கழித்துக்கொண்டு பாக்கி பால் விற்பனைத் தொகையை வாரா வாரமோ மாதத்திற் கொருமுறையோ பட்டுவாடா செய்யலாம். பருத்திக் கொட்டை, புண்ணாக்கு முதலியன விற்பதற்காக ஒரு ஸ்டோர் பகுதியும் ஆரம்பித்தால் அப்போதப்போதே பாலுக்குப் பதிலாக சாமான்கள் கொடுத்து விடலாம்.

டேனிஷ் குடியானவனுக்கு கூட்டுறவு சங்கம் எல்லாவிதங்களிலும் ஒத்தாசை செய்கிறது. அவனுடைய மாடுகளுக்கு வைத்தியம் செய்யவும், அதிகமான அளவு பால் உற்பத்தி செய்யவும் ஆலோசனை கூற நிபுணர்களை ஏற்பாடு செய்திருக்கிறது. புண்ணாக்கு முதலிய தீவனங்களை மொத்தமாக வரவழைத்து கொள் முதல் விலைக்குக் குடியானவனுக்கும் கொடுக்கிறது. அந்த மாதிரிதான் ஒரு மத்தியஸ்தாபனம் இந்தியக் குடியானவனுக்கு வேண்டிய வசதிகள் அளிக்கவேண்டும். தீவனப் பொருள்களைத் தானே உற்பத்தி செய்து சேமித்து வைத்துக்கொள்ளும்படி அவனைத்தூண்ட வேண்டும். தீவனப் பொருள்கள் சாகுபடியாகும் நிலங்களுக்குக் கொஞ்சம் தீர்வை வஜா செய்யவேண்டும். விவசாய இலாகாவும் தீவனப்பொருள் விதைகளை விளம்பரப்படுத்தி, ஒவ்வொரு பிர்காவிலும் அந்தப் பயிர்களை ஏற்றும் முறையை விளக்கிக் காட்ட வேண்டும்.

(தொடரும்)

"வாய்தா முடை"

பஞ்சாங்க ஐயர் :—டேய் குப்பா! நீ இன்னிக்கி தெவசம் கொடுக்கணும்டா.

குப்பன் :—என் சாமி, புரட்டாசி மாசத்திலென்னு நான் கொடுக்கணும்! இப்ப என்னு அதுக்கு? எசமானுக்கு பகுதிப்பணம் பாக்கி கொடுக்கலே. வாய்தா வேற வந்துடுச்சி. இன்னும் ரெண்டு மாசம் போவட்டும் சாமி.

பஞ்சாங்க ஐயர் :—எய் குப்பா, நானும் வாய்தா செலுத்த பணமில்லாமதான் இப்படி புறப்பட்டேன். எண்டா சொக்கலிங்கத்துகிட்ட பணமிருக்குமா? இருந்தா அவனையாவது இன்னிக்கி தெவசம் கொடுக்கச் சொல்லணும்.

பெரிய கருப்பன் கடிதம்

(கோத்தமங்கலம் சுப்பிரமணியம்)

[பெரிய கருப்பன் எழுதியிருக்கும் கடிதத்தை அப்படியே மகிழ்ச்சியுடன் பிரசுரிக்கிறோம். அவன் ஊர் மட்டும் தெரியவில்லை. தஞ்சாவூர் ராமனாதபுரம் ஜில்லா எல்லைகள் நெருங்கும் இடத்திலிருப்பவன் என்பது அவன் எழுதியிருக்கும் நடையிலிருந்து தெரிகிறது. அவன் 'எசமான்' யாரோ தெரியவில்லை. பாதகமில்லை. கண்டுபிடித்து விடுவோம். அவன் யோசனைகளை யெல்லாம் "வக்கல் ஐயா" கவனத்தில் வைத்திருப்பார் என்று உறுதி கூறுகிறோம்.

ஆசிரியர்.]

பட்டணம் வக்கல் வெங்குட்டு ரமணி அய்யாவுக்கு பெரிய கருப்பன் எழுதிய சேதி என்னவென்டால், இவடம் யாபேரும் சேமம். அவடஞ் சேமத்துக்கு எளுத வேணும்.

நான் முந்தாநாத்துச் சந்தெக்கிப் போயித்து வாரப்பொ, மருதைக் காரண்ணன் கடையிலே ஒங்கப்பேப்புரு கிடக்கப்பாத்தேன். அதுந்தலெப்புலே ஒரு படம் யெங்க குப்பக் கோனுரு சாடைக்கி ஏரப்புடுச்சு ஓட்னுப்லே போட்டிருக்கிகளல்ல அதைப் பாத்தது மொத கோனுருக்கு வந்த கிருவஞ் சொல்லி முடியாது. அத்தப் பெரிய மவராசன் பட்டணத்துலே எம்பிட்டோ பெர்ரிய மனிசாளுகள்ளாம் இருக்குறப்போ, இவுரையுங்கூட ஒரு மனிசனு மதிச்சு நீங்க படம் போட்டுப் புட்டிகளாம், ரொம்ப சந்தோசப்பட்ராரு. வீசருபாயைப் போட்டு ஒண்ணெ வாங்கிப் படத்தைக் கத்தரிச்சு பார வண்டிக் கூட்டிலே பிசினைத் தடவி ஒட்டிப்பிட்டாரு. நாங்கூட மொதவே சந்தேகப் பட்டேன். ஏதாச்சும் சினிமாவேசப் படமாங் காட்டியும்னு கள்ளாம் ஒங்கிளுக்கு கிராமம்னு உசுருண்ணு சொன்னப் பொறகு திருத்திப் பட்டிச்சு. ரொம்ப சந்தோசம். ஒங்கிளுக்கு மாரியாத்தா தொணை செய்ய வேண்டிக்கரேன்.

நீங்க கிராமத்துச் சங்கதீலே ஏன் திரும்புனிக? எங்க தேவைக்கி ஒளெக்கிரதுக்குனு ஒரு மனிசன் அம்புட்டுட்டா நாங்க சும்மா விட்டுப்பிட மாட்டமே. அந்தப் பாளாப்போன வவுத்துக்கு, அரிசிச் சோறு போட்ரதுக்குள்ளே இத்தினை தூரம் மனிசனை வம்பு பண்ணுது அது. இருக்கட்டும், மொத இந்த ஊருச் சங்கதியைச் சொல்ரேன். இதுக் கொரு வளியைப் பண்ணுங்க.

யெந்தத் தலைமொரை யிலேயோ இந்த ஊரு முப்போகம் வௌஞ்சிச் சும்பாக. ஆனா நப்பன் காலத்துலே காலமும் கோடையும் வெள்ளாமை பண்ணினம்னு அது சொல்லிக் கேட்டிருக்கம். இப்ப அதெல்லாம் போச்சு. சுதாவா ஆருமாசத்துப்பயிரு "செம்பாளை கைவிரச்சம்பா கூட வெதைக்க நெஞ்சுத் தெடமில்லை. போன கடுத்தம மோசம் பெரு மோசமாப் போச்சு. சும்மா 9. நாளை வெள்ளாமையா குந்தாணிச் சம்பாவைப் போட்டுட்டு நடவுப் பயிருக்குத் தண்ணி பொட்டி கட்டி இரைச்சம். அம்புட்டுத் தான் கருகருண்ணு நெஞ்சுப் புடியாக் கருது துருத்துக்கினு வாரப்போ ஒரு தண்ணிப் பாட்டிலே, 3 மாசத்துப் புள்ளெ மாந்தத்துலே சோந்தாப்புலே சோந்து விளுந்து போச்சு. கடாசியா சாவியைத் தான் பொறக்கினோம். உளப்புக் காளைக் கூளத்துக்குக்கூட ஆகலே. தருசு பொட்டா அவதாரம் சாவி அருக்க கைநடுங்குது. எதை நெனைக்கிரது? இந்த வருசம்கூட அருவதாங்குருவையைத் தான் அள்ளித் தளிச்சம். அதுக்குந் தெய்வம் பாத்தேன். ஆனா ஊரிலே மத்தவு திருவள்ளம் எப்படியோ யாரு கண்டாக?

இது களைப்படிச்சிட்டு என்னையைச் சோம்பரைப் புடிச்சவனுங்காட்டிபும்னு எண்ப்பிடி விகளோணு பயப்புடரேன். அப்படி யெண்ணு

மில்லே. பத்துமாசஞ் செமந்தும் பெத்த புள்ளே சொவுடுங்கிருப்லே எங்க அதிட்டம் அடிக்குது.பொட்டி யிலே துட்டிருந்தாத் தானே மனி சன் மொகத்துலே களே? அது மாருதித்தானே பயிரும்? கம்மா யிலே தண்ணிக் கிடந்தாத் தாத் தானே பயிருமுகத்துலே பசுமை கெடக்கும்.

எங்க கம்மாக்கிப் பேரு ஓட்டக் கொளம்னு சொல்ருக. முக்கி எப்ப வோ ஒரு தபாபுட்டுக்கினு போயி ருச்சாம் இப்ப அந்தக் கவலே இல்லே. தண்ணித் தங்குனுத்தானே புட்டுக்கினுபோக? உள்வாய் மோடிட் டுப் போச்சு. மடையைத் தொரந் திட்டாப் போதும். தெரிச்சுவிட்ட அம்புக் குச்சி பரிஞ்சாப்பிலே சிவ் வுன்னு பரியுது. ஒருமா தண்ணி யிலே கலிங்கி ஓடுது. எண்ணெத் தலே யிலே தண்ணி விட்டாப்பிலே பொட்டு நிக்காமே வடிஞ்சுபோகுது. கம்மாக்கி வெட்டுவிடணும். கிரா மத்து எசெமான் ஒரே புடிவாதமாப் பேசராரு. சன்வார் பாக்கி ஓட்டுக் கும் வசூலாகணுமாம். திருத்தியா ஒரு கடுத்த மாச்சிம் கண்டுமுதல் காணனுமாம், அப்பத்தான் வெட்டு விடுவாராம். வவுத்துலே நோக்கா டிருந்தா கைகால் அசந்து போயிரா தா? கம்மா வெட்டில்லாமே சாகுபடி எப்படி நடக்குமுணு கேட்டா, இந் தக்கைகால் ஏன் நோக்காடு வர விட் டிச்சுனு கேக்கராரு. இந்த வம்பு எட்டு வருசமா நடக்குது. இன்னும் எத்தினி வருஷத்துக்கு நடக்குமோ.

ஆனதாலே, நீங்க பட்டணத்துலே இருக்குரவுகளாகச்சே எப்பவும் வார மொரைப்படி இந்த வருஷமும் எங்க எசமான் குருதைப் பந்த யத்துக்கு வருவாருல்லே அப்ப இதைக் கொஞ் சம் எடுத்துச் சொன்னிகள்ளு ஒங்க புள்ளே குட்டி பேரைச் சொல்லி நாங்க பொளப்பம். அவரு லாயத் துலே ஒரு குருதையாப் பொரந்தி ருந்தம்ணு இதெல்லாம் எளுதப்போர தில்லே. அவுரு கிராமத்துலே குடி யானவனுப் பொரக்கப் யோக இதை எளுதினேம். நீங்க சொல்லக் கூச்சப் பட வேண்டாம். இன்னக்கி வரைக் கும் எங்க எசமான் வக்கலு சொல் லேத் தட்டிருங்கரது கிடையாது. நீங்க சொல்லுமதைப் பொருத்து எங்க கம்மாயிலே மம்மெட்டி விள ணும்.

ஊளியன்.

இந்த — கீரல் பெரிய கருப்பன்.

ஒரு சங்கதி விட்டுப் போச்சுங்க.

குடியானவன் சட்டமுணு ஒரு சட்டம் வந்திருக்காமே. அது எப் புடி. நப்பன் காந்தி மகாராசா தர்மத் துலே அது நல்ல தாத்தானிருக்கு முணு நம்பிக்கை. நாங்கூட ஓட்டும் போது வந்தாரே—தொண்டராமல்ல அவரு—அவுரைக் கேட்டேன் சோக் கான சட்டம்ணுரு. விவரம் சொல்லத் தெரியலே. வக்கலேக் கேட்டாத்தான் தெரியும் னுட்டாரு. அதுதான் உங் களுக்கு எழுதியிருக்கேன். நிசமாக் கேக்குரேன் எங்ககிட்ட வக்கலுக்குக் குடுக்க பணமிருந்துச்சுனு கடனேக் குடுத்துக் களிச்சுப் பிடமாட்டமா? நீங்களே சொல்லுங்க. முளியா முளிக்கிரம். எங்க சித்தப்பாரு ஒரு தடவை வங்கிச் செக்கை வச்சிக் கிட்டு பணம் மாத்த முடியாமே முளிச்சமாதிரி நாங்களும்முளிக்கரம். ஆக, நீங்க பெரிய மனசு பண்ணி அந்தச் சட்டத்தைப் புரிச்சுப்புரிச்சு ஒரொரு சராவுக்கும் ஒரொரு கதை யா எளுதி எங்கிளுக்குப் புரியுராப் பிலே பத்திரிகையிலே போட்டிகணு கோடிப்புண்ணியம். நானும் சந்தைக் குச் சந்தை மொளகாயையும் புளி யையும் நிருத்திப்பிட்டு அந்தக் காசுக்குப் பத்திரிக்கையே வாங்கி யாரையாவது விட்டுப் படிக்கச் சொல்லி எல்லாரையும் கேட்டுக்கச் சொல்ரேன்.

இல்லே இந்த லேடியோவுலே யாச்சும் தான் சொல்லுங்களேன். அது வந்தாலும் வந்திச்சு, நம்மை (நன்மை)யும் பண்ணிச்சினு இருக் கட்டுமே. கை யெடுத்துக் கேட்டுக்க ரேன் மறந்துடாதீங்க.

இந்த — கீரல் பெரிய கருப்பன்.

காலச் சக்கரம்

(ஸ்ரீ. டி. டி. கிருஷ்ணமாச்சாரி, எம்.எல்.ஏ.)

லயோனல் கர்ட்டிஸ் என்பவர் எழுதிய ஓர் புத்தகத்தில் "நம் தலைக்குமேல் ஒரு பெரிய ஆபத்து நம்மேல் விழத் தயாராயிருக்கிறது என்ற பயத்தில் நாம் காலத்தைக் கழிக்கிறோம். அந்தக் கஷ்டங்கள் வந்தால், ஐரோப்பாவில் பழைய நாகரீகம் சிதைந்துபோன நாட்களிலிருந்ததை விட அதிகமாக நம்மை அந்தகாரத்தில் ஆழ்த்திவிடும்" என்று சொல்கிறார். இவர் கூறும் வார்த்தைகள் நாளுக்கு நாள் உண்மையாகி வருகின்றன. லேய்டன் என்ற அமெரிக்க புரொபஸர் தற்கால நாகரீகத்தை மிருகத்தனமான ஆத்மா வாழும் ஓர் அதிசயமான கருவி என்கிறார். ஆகையால், ஒரு அறிவாளி தற்போதுள்ள முன்னேற்றம் ஆத்மாவை யிழந்து கண்மூடித்தனமாய் இருக்கிறதென்றும், மற்றொரு அறிவாளி கண்மூடித்தனமான இந்த முன்னேற்றம் நம்மைப் படுகுழியில் தள்ளப்போகிறதென்றும் கூறுவதைக் கேட்கிறோம்.

பல நூற்றாண்டுகளாக, ஆத்மார்த்திக விஷயத்தில் நாம் கவனம செலுத்திவந்தோம். மேல்நாட்டு முன்னேற்றத்தில் உபயோகமோ அல்லது நியாயமோ இருப்பதாக நமக்குத் தெரியவில்லை. ஆனால் இப்படி மேல் நாட்டு நாகரீகத்தைப் பற்றி அபிப்பிராயம் கொள்வதே விவாதத்துக்கிடமானது. வாழ்க்கை நிலையை உயர்த்திக் கொள்வதற்கும் அரசியல், பொருளாதார வாழ்க்கையை மானுஷ்யமாக, உணர்ச்சியுள்ளதாகச் செய்வதற்கும் ஏற்பட்டுள்ள பெரிய இயக்கங்கள் கண்மூடித்தனமானவை அல்ல; மனித ஆத்மா நல்ல வாழ்க்கைக்காகச் செய்யும் முயற்சிகளைத்தான் அவை குறிக்கின்றன.

ஒவ்வொரு தேசத்திலும் உள்ள அறிவாளிகள் வேகமாக மாறிக்கொண்டிருக்கும் சந்தர்ப்பங்களுக்குத் தகுந்தாற்போல தங்கள் கொள்கைகளை மாற்றிக் கொள்ளவேண்டியது அவசியம். இப்போதுள்ள முறைகளும் ஸ்தாபனங்களும் எப்போதுமே நிலைபெற்றிருக்கப் போகின்றன என்று நினைப்பது தவறாகும். நல்ல வாழ்க்கை என்ற லட்சியத்தை அடைவதற்கு ஸ்தாபனங்கள் ஓர் வழி. அவைகளை எப்போதுமே மாற்றக்கூடாது என்று சொல்லுகிறவர்கள் லட்சியத்திற்கான வழியின் தன்மையை சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை என்பதைக் காட்டுகிறது. அதிகாரத்திலிருப்பவர்கள், செல்வாக்குடையவர்கள், அந்தஸ்தில் இருப்பவர்கள், காலத்தை ஒட்டித் தங்கள் அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ளவில்லை என்றால், பிற்போக்காளர் என்ற ஒரு வகுப்பு உண்டாகிவிடுகிறது.

இந்த விவாதத்தை அரசியலில் பொருத்திப் பார்ப்போம். நமது தேசத்தில், இருபது அல்லது இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னால், ஸுரேந்திரநாத் பானர்ஜி போன்ற தலைவர்கள் குடியேற்ற அந்தஸ்து இந்தியாவுக்குக் கிடைத்தால் திருப்தியுடன் இருந்திருப்பார்கள். பதினைந்து வருஷங்களுக்கு முன்னால் ஸி. ஆர். தாஸ் குடியேற்ற நாட்டந்தஸ்தை உடனே கொடுக்க வேண்டுமென்று கேட்டார். ஆனால் இப்போது தேசத்தின் அரசியல் லட்சியம் இந்தியாவுக்கு சுயேச்சையான, தேசீய, சர்வ தேச அந்தஸ்து கொடுக்கக்கூடிய பூரண சுயராஜ்யம்தான். இந்த மாறுதல்களுக்குக் கிளர்ச்சிக்காரர்கள் ஜவாப்தாரிகளல்ல. ஜனங்களின் உணர்ச்சிதான். இதை முன்னேற்றம் என்றாலும் சரி, சென்ற காலங்களில் நிலவியிருந்த குழப்பத்திற்கு நம்மைக் கொண்டு போய்விடும் இயக்கம் என்று சொன்னாலும் சரி, மாறுதல் இருப்பதை நாம் கவனிக்கவேண்டும்.

பொருளாதார சமூக வாழ்வைக் கவனிப்போம். இங்கேயும் ஓர் மாறுதலைக் காண்கிறோம். இப்போதிருக்கும் பொருளாதார சமூக ஸ்தாபனங்களை உபயோகமில்லை என்று சொல்கிறார்கள். ராஜீய இயக்கம் எதிர்காலத்தில் உள்நாட்டி

லேயே பொருளாதாரக் கலவரத்தை உண்டாக்கலாம். அப்போது அந்த ஸ்தாபனங்கள் வாழ்வும், உபயோகமும சந்தேகத்திற் கிடமாகிவிடும்.

பணக்காரர்கள்-தங்களுடைய திறமையாலும் வியாபாரத்தினாலும் பொருளாதார முன்னேற்றத்திற்காக உழைத்த பணக்காரர்கள்—தங்கள் உரிமைகளைக் குலைக்கச் செய்யப்படும் எந்த முயற்சிகளையும் பார்த்து வருந்துகிறார்கள். இவர்களிடமிருந்து இந்த ஆக்ஷேபணையை எதிர்ப்பார்த்தல் நியாயம்தான். ஆனால் மற்ற சிலரோ பலதரப்பட்ட ஸோஷலிஸ்டுகள் எழுதிய புஸ்தகங்களைப் படித்துவிட்டு பலாத்காரமான சில மாறுதல்களைக் கொண்டுவர வேண்டுமென்கிறார்கள். ஸோஷலிஸத்தைக் கொள்கையாகக் கொள்ளாத நாடுகள்கூட இப்போது பொருளாதார ஸ்தாபனங்களை மாற்றியமைக்க ஆரம்பித்து விட்டன.

பழைய ஸ்தாபனங்களும், வழக்கங்களும் சட்டங்களும் மெதுவாக மாறிக் கொண்டிருக்கின்றன என்பது சர்க்கார் புதிய பொருளாதார முறைகளால் தெரியவருகிறது. ஆனால் பணக்காரர்கள் பழைய விஷயங்களை விடமாட்டேனென்று பிடித்துக்கொண்டிருந்தால் கலவரம்தான் உண்டாகும். நல்வாழ்க்கை உண்டாவதற்கான 'சமூக ராஜ தந்திரத்தை' அவர்கள் கைக்கொள்ள வேண்டும்.

ஹிந்து தர்மத்தைக் கடைப்பிடித்தவர்களுக்கு, மேல் நாட்டு இயந்திர முறையை அறியாத நமக்கு, பொருளாதார முறையை அமைதியாகத் திருத்தி அமைப்பது கடினமானதல்ல. பொருளாதார அமைப்பில் மாறுதல்கள் வந்துதான் தீரும். ஆனால் சீக்கிரமாக உண்மையைத் தெரிந்துகொண்டு பொருளாதாரத் துறையில் முக்கிய ஸ்தானம் வகிப்பவர்கள் 'சமூக ராஜதந்திரத்தைக்' கையாண்டால் தான் வேற்றுமை தீர்ந்து நல்வாழ்க்கை அடிகோலப்படும்.

இந்தியன் மியூச்சுவல்

லைப் அஸோஸியேஷன்; லிமிடெட்,

10, மவுண்ட் ரோடு, சென்னை.

"சுதேச ஆயுள் அஷ்யூரன்ஸ் கம்பெனிகள் வளர்ச்சி தேசீய செல்வத்தைத் தேக்கி வைப்பதற்கும் தேசீய மனப்பான்மையையும் தொழில்களையும் வளர்க்கவும் பெரிதும் உதவி செய்கிறது" என்று காங்கிரஸ் தலைவர் சமீபத்தில் கூறினார். ஆகவே ஆயுள் ஸ்தாபனங்களின் முக்கியத்துவம் நன்றாகப் புலனாகிறது.

ஆனால் முதலாளித்வத்தை அடிப்படையாகக்கொண்ட ஆயுள் ஸ்தாபனங்களுக்கும் பாலிஸி ஹோல்டருக்குச் சொந்தமான மியூச்சுவல் கம்பெனிகளுக்கும் வித்தியாசம் இருக்கிறது. இரண்டாவது விதத்தைச் சேர்ந்த ஸ்தாபனங்கள் ஜனநாயக தத்துவத்தைக் கொண்டது.

சென்ற நூற்றாண்டின் இறுதியில் ஒன்றிரண்டு மியூச்சுவல் ஸ்தாபனங்கள் கூட இல்லை. அந்த ஸ்தாபனங்களும் கூட சரிவர வேலை செய்யவில்லை. ஆனால் 1925-ம் வருஷத்தில் இந்தியன் மியூச்சுவல் ஆரம்பமானதும் ஒரு முக்கியமான தேவை பூர்த்தியாயிற்று.

இந்தியன் மியூச்சுவல் ஆரம்பத்திலிருந்து சீரும் சிக்கனமாக நிர்வாகம் செய்யப் படுவதால் இப்பொழுது பிரும்மாண்டமான ஸ்தாபனமாக ஆகியிருக்கிறது. இப்போது ஆயுள் நிதி 7 லக்ஷம் ரூபாய். பாலிஸி ஹோல்டர்களுக்கு இது வரை லக்ஷ ரூபாய்க்கு மேல் கிளேம்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன.

இதுவரை இந்தியன் மியூச்சுவல் செய்து வந்த பொது சேவையை எதிர் காலத்திலும் செய்ய நிர்வாகஸ்தவர்கள் முயலுவார்கள்.

டைரக்டர்கள் :

ஸர். வேப. ராமேசம், Kt.

ராவ் பகதூர் கே. பலராம ஐயர்.

திவான் பகதூர் ஏ. வி. ராமலிங்கய்யர்.

ஸ்ரீ டி. எஸ். நாராயணஸ்வாமி எம். ஏ.

ஸ்ரீவி.எம்.ஸ்ரீனிவாசன்(எக்ஸ் அபீஷியோ)

அபேதவாதம்

(கு. ப. ராஜகோபாலன்)

ஆங்கிலத்தில் 'ஸோஷலிஸம்' என்பதைத் தமிழில் 'அபேதவாதம்' என்கிறார்கள். ஹிந்தியில் 'ஸாம்யவாதம்' என்று வழங்கும் பெயரை யொட்டி இது தமிழில் பழக்கத்திற்கு வந்திருக்கலாம். ஆனால் இது அவ்வளவு திருப்திகரமான வார்த்தை அல்ல. ஸ்ரீ சந்தானம் ஸோஷலிஸத்திற்கு 'சமாஜ யோகம்' என்று தமிழில் சொல்லலாம் என்கிறார். அது கூட அவ்வளவு நன்றாக இல்லை. அபேதவாதம் என்ற வார்த்தை பிரபலமாகி விட்டது. இனிமேல் அதை மாற்றுவதும் சாத்தியமில்லை.

ஜனசமூகத்தின் ஒரு அபேத நிலையைப்பற்றிய கொள்கை அபேதவாதம். அது ஒரு அரசியல் அமைப்பைக் குறிக்கும். இது மேல்நாட்டு நாகரீகப் போக்கில், ஜனநாயகம் முற்றி அதன் பழமாக உற்பத்தியானது. விஞ்ஞான அபிவிருத்தியும் இயந்திரங்களின் வளர்ச்சியும் தான முக்கியமாக இதற்குக் காரணங்கள்.

மனித சமூகத்தைத் தொழிலாளி முதலாளி என்ற இரண்டு விரிந்த பிரிவாகப் பிரிக்கலாமல்லவா ? பல்லக்கு ஏறுபவன் பல்லக்குத் தூக்குபவன் என்று நமது நாட்டில் சொல்வதுபோல இந்த வர்க்கப் பிரிவினை எங்குமுண்டு.

பல்லக்கு ஒன்று இருந்தால்தானே, ஒருவன் பல்லக் கேறுவான், மற்றொருவன் அதைத் தூக்கவேண்டி வருகிறது? பல்லக்கையே உடைத்தெரிந்து விட்டால்? அதுதான் அபேதவாதத்தின் லட்சியம்.

அபேதவாதத்தின் கீழ் சர்க்கார் பல்லக்கில்லாத முதலாளி. தற்காலம் இருக்கும் முதலாளியின் ஸ்தானத்தைச் சர்க்கார் ஆக்கிரமித்துக் கொண்டு விடும். நம் நாட்டில் இரண்டு முதலாளிகள் இருக்கிறார்கள். அன்னிய சர்க்கார், இதரசில்லரை முதலாளிகள்.

தொழிலாளி பட்டபாட்டின் பலன் முக்கால்வாசியும் முதலாளிகளின் கையில், சேர்களில் கட்டிய நெல்போலத் தங்கி விட்டது. குளத்தில் விழும் வெள்ளம் போல ஓரிடத்தில் தேக்கம்கொண்டு விட்டது. அதைத் திரும்பத் தொழிலாளிக்கு வந்து சேரும்படி செய்வதுதான் அபேதவாதம்.

தொழிலாளிகளுடைய உழைப்பின் பலனை முதலாளி என்ற ஒரு இடத்தில் போய்த் தங்காமல், ஒரு அணைக்குள் போய்த் தேக்க மடையாமல், அது உற்பத்தியாகும் தலைப்புகளிலேயே தடுத்து விடலாம். அதுதான் இந்தியா போன்ற விவசாய நாடுகளுக்கு ஏற்ற முறை. இயந்திரப் பெருக்கால் நகரக் கூட்டமாகிவிட்ட நாடுகளில் இந்த முறை உபயோகப்படாது. நம் நாடு நகரசமூகம் ஆகவில்லை. என்றும் ஆகாது. நம் நாடு அதன் ஏழுலட்சம் கிராமங்களில் தான் எந்நாளும் குடிப்பிரியம் கொண்டிருக்கும். அங்கேயே பொருள் உற்பத்தி மூலங்களில் பொருளை சமூக உடமை ஆக்கலாம்.

காந்தீயத்தின் முயற்சி அதுதான். அதன் அம்சங்களாகிய கதர் இயக்கம் கிராமக் கைத்தொழில் இயக்கம்—பொதுவாகக் கிராமப் புனருத்தாரணம், வர்தாக் கல்வி இயக்கத்திட்டம் அதைப் பெருவாரியாகச் சாதித்துவிடும்.

அபேதவாதம் என்பது பொருள் உற்பத்தி மூலங்களை—சாதனங்களை—பொதுவுடைமையாக்குவது. அரசியல் அவைகளைக் கைப்பற்றி விட்டால் அது நடந்துவிடும்.

மேல்நாட்டு அபேதவாத முறை நமக்கு ஏற்றதல்ல; நம் நாட்டுக்கு ஏற்றதான முறையை காந்தீயத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு நாம் சிருஷ்டித்தாக வேண்டும்.

எந்த விதத்திலோ ஜனநாயகத்திற்கு அடுத்த முன்னேற்ற முறையாக அபேதவாதம் கட்டாயம் ஒரு அரசியல் உருவமாக வந்தே தீரும். அதற்கு மேற்பட்ட உருவம் சர்வாதிகாரமா? அல்லது அதற்கு மேல் மனித சமூகத்திற்கு வேறுவிதமான அபிவிருத்திப்பாதை இருக்கிறதா என்பதை யார் சொல்லக்கூடும் ?

துணுக்குகள்

கார்ப்போரேஷன் வருமானம்

சென்னை கார்ப்பொரேஷனுக்கு 1936-37-ம் வருஷத்தில் ரூ. 63,83,843 வருமானம். 1937-38 ல் அது ரூ. 66, 70, 394 ஆக அதிகரித்துவிட்டது.

சர்க்கார் விவசாயப்பண்ணை

தலிப்பரம்பா என்ற ஊரில் சர்க்கா விவசாயப்பண்ணை ஒன்று இருக்கிறது. அது முதல் முதலாக 1905-ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. அதன் மொத்த விஸ்தீர்ணம் 150 ஏகர்கள் ; அதில் சுமார் 65 ஏகர்கள் சாகுபடியில் இருக்கின்றன: நஞ்சை 7½ ஏகர்கள் ; மிளகு 30 ஏகர்கள் ; பாக்கியில் தென்னை, மா, பலா, முதலிய விருக்ஷங்களையும், மானவாரிப் பயிராகும் இஞ்சி, மிளகாய் முதலியவைகளையும் பயிரிடுகிறார்கள்.

பாம்பு விஷத்தால் பிழைத்தான்!

வால்டர் உப்பைன் என்பவனுக்கு ஒரு வியாதி; ஒரு காயம் பட்டு விட்டால் அவன் சாகவேண்டியதுதான் ; அதாவது ரத்தம் தோய்ந்து போகாமல் அதிலிருந்து வந்துகொண்டே இருக்குமாம். ஒரு சமயம் ஒரு ஏணியிலிருந்து விழுந்த பொழுது நாக்கைக் கடித்துக்கொண்டு விட்டான். ரத்தப்பெருக்கு ஓயாமல் நாக்குத் தடித்துத் தொண்டையை அடைத்துக் கொண்டுவிட்டது. மூச்சுக்காற்றின் வழி அடை பட்டுப்போயிற்று. பாம்பின் விஷத்திலிருந்து தயாரித்த ஒரு மருந்தை நாக்கின் நுனியில் தடவினார்கள். உடனே ரத்தப் பெருக்கு நின்று வீக்கம் வடிந்துவிட்டது. பிழைத்து விட்டான்!

படையெடுப்புக்குத் தடை

தன்னுடைய மேற்கு எல்லையில் ரஷியா ஒரு ஜன சூன்யப் பிரதேசத்தை உற்பத்தி செய்கிறதாம். அதில் மரம், ரோட்டு நீர், நிழல் ஒன்றும் இருக்காதாம். அது சில இடங்களில் சில மைல் அகலமும் பல இடங்களில் 100 மைல்கள் வரை அகலமாயும் இருக்குமாம். எதிரிகளின் படை அதைத் தாண்டிக்கொண்டு ரஷ்யாவிற்குள் வருவதற்குத் தாமதமும் சிரமமும் ஏற்படும். இந்தப் பிரதேசத்திற்குப் பின்னால் சரியான ராணுவ தற்காப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்குமாம்.

ஆஸ்பத்திரிகள் எத்தனை?

சென்னை ராஜதானியில் 1134 ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. பம்பாயில் 429 தான் இருக்கின்றன. வங்காளத்தில் 1449 இருக்கின்றன.

சென்னை ராஜதானியில் 1936-ம் வருஷம் ஒவ்வொரு மனிதனுக்கும் சராசரியில் 0-2-7 சர்க்கார் வைத்தியச் செலவு செய்திருக்கிறார்கள். பம்பாயில் 0-4-9 செலவழித்திருக்கிறார்கள். வங்காளத்தில் 0-2-1 செலவழித்திருக்கிறார்கள்!

இந்தியாவில் வருஷாவருஷம் சுமார் 160, 000 ஸ்திரீகள் பிரசவத்தில் இறக்கிறார்களாம்.

டால்ஸ்டாய் கிரந்தங்கள்

டால்ஸ்டாயின் 110-வது பிறந்தநாளின் ஞாபகார்த்தமாக ரஷிய புத்தகப் பிரசுராலயங்கள் டால்ஸ்டாயின் புத்தகங்களை 10,000 பிரதிகள் அச்சடிக்கப் போகிறார்களாம். 1917 முதல் அவருடைய எழுத்துக்கள் சுமார் 17,000,000 பிரதிகள் விற்பனையாகி இருக்கின்றனவாம்.

காங்கிரஸ் மான்யம்

காங்கிரஸ் சர்க்கார் இந்த வருஷத்தில் 75 லக்ஷ ரூபாய் நிலவரியைக் குறைத்திருக்கிறார்கள். கதர் தொழிலுக்காக 2 லக்ஷ ரூபாய் கொடுத்து உதவி யிருக்கிறார்கள். கிராமத் தண்ணீர் வசதிக்காக 15 லக்ஷ ரூபாய் நிதியை ஏற்படுத்தியிருக்கிறார்கள். கிராமங்களில் ரேடியோக்கருவிகள் வைக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கு உதவிசெய்ய 11.24 லக்ஷம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். விவசாயிகளுக்குக் கடன் கொடுக்க 50 லக்ஷம் ரூபாய் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். 83.4 லக்ஷம் ரூபாய் மின்சாரம், நீர்ப்பாசனம் இவைகளுக்காக ஒதுக்கப் பட்டிருக்கிறது.

புது அத்தியாயம்

[கே. ஆர். சுப்புரத்தினம்]

ஆற்றங்கரை ஊஞ்சமரத்தடியில் ஓடும் நீரைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான் ரத்தினம். நொய்யல் நதியில் கரை புரள ஓடிக்கொண்டிருந்தது புது வெள்ளம். அந்தச் சென்னீரிலே கரையோர மரங்கள் உதிர்க்கும் மலர்களும், மட்டைகளும், சருகு, செத்தை பச்சை இலைகளும் பார்ப்பதற்கு அழகாக மிதந்து சென்று கொண்டிருந்தன.

அந்தப் புது வெள்ளப் பெருக்கைப் போல ரத்தினத்தின் உள்ளத்திலும் எண்ண அலைகள் பெருகிக் கொண்டே தானிருந்தன. அவனுக்கு எதிரில் வானத்துப் பட்சிகள் 'மாலைக் கீதங்களை இசைத்துக் கொண்டே தங்களுடைய கூடுகளை நோக்கிப் பறந்து சென்றன. பக்கத்துத் தோட்டத்தில் சோளப் பயிரில் மாட்டைத் தவறவிட்ட ஒரு மாடு மேய்க்கும் சிறுவன் " ந்தா சண்டிக் கொரகம்! உம், ஓடு" என்று கத்திக் கொண்டு மாட்டை விரட்டி ஓடினான். ஒரு மூக்குத்திப் பறவை அவன் தலைக்கு மேல் மரப் பொந்திலிருந்து, ஒரு பட்டையை அலகில் கொத்தித் தள்ளியது. தூரத்துத் தோட்டத்தில் வேலையை முடித்துக் கொண்டு போகும் இளம் பெண்களின் பேச்சிரைச்சல் காற்றோடு கலந்து வந்தது. ஆனால் இவைகள் எல்லாம் அவன் புலன்களில் மோதவில்லை. யோகியைப் போல ஆழ்ந்த சிந்தனையிலேயே தன்னை மறந்திருந்தான்.

ரத்தினம் வேதனை தாங்காமல் என்னவோ முணு முணுத்தான். "என்னை எதிர்பார்த்து அவள் காத்துக் கொண்டிருப்பாள். குழந்தை கூட இன்னும் தூங்கியிருக்காது. ஐயோ! என்னைக் கண்டவுடன் தாவிக் கொண்டு வருவானே ராஜு. நான் வெறும் கையுடன் போனால்? நான் இன்றும் போய் அவன் இல்லை யென்று சொல்லி விட்டான் என்றால் அந்த சின்ன இருதயம் என்ன பாடு படும்?" என்று கேட்டுக் கொண்டான். அவன் கண்களில் நீர் நிறைந்தது. மேல் துண்டை எடுத்து விரித்து அந்த மரத்தடியிலேயே படுத்துக் கொண்டான்.

அவன் உள்ளத்திலே புதிதாக எண்ணங்கள் ஜனித்துக் கொண்டே இருந்தன. அந்தப் பழைய நாட்களின் நினைவு அவன் கண் முன் வந்து, அவனை வதைத்தது. என்ன வாழ்க்கை இது? வாழ்க்கைச் சுழலிலே மனிதன் என்னென்ன கஷ்டத்திற் குள்ளாகிறான்? காலம் என்னென்ன மாறுதல்களைச் செய்து விடுகிறது? அசைக்க முடியாத அரண்களெல்லாம் காலத்தால் மண்ணும்கல்லுமாய் போய்விடுகிறதே? பிரும்மாண்டமான பர்வதங்கள் நிர்த்தூளிப்பட்டுப் போய் விடுகின்றன. பெரிய குடும்பங்கள் தலை கீழாக மாறி விடுகின்றன.

தான் முன் நடத்திய வாழ்க்கையை எண்ணினான். அந்த சென்று போன சுவர்க்க நாட்களுக்கும், இப்போது நாளை எண்ணிக் கொண்டு கழிப்பதற்கும் எவ்வளவு வித்தியாசம்! தன்னாலல்லவா கஷ்டங்களை அனுபவித்தறியாத தன் மனைவி ஜயாவும் பல இன்னல்களுக் காளாக வேண்டி யிருக்கிற தென்றெண்ணி வருந்தினான். ரத்தினம் தற்சமயம் ஒரு சைக்கிள் கடை வைத்திருந்தான். ஆனால் வாடகைக்கு வந்து எடுப்போரைத்தான் காணோம். அப்படி எடுத்தால்தான் கடனாக வல்லவோ எடுத்துக் கொண்டு போய் அலக்கழிக்கிறார்கள்? கையிலிருந்த இரு நூறு ரூபாயையும் போட்டு வேறு ஏதாவது வியாபாரம் செய்திருந்தால் கூட சுமாராகக் கஷ்டமின்றி குடும்பத்தைத் தாட்டிக் கொண்டிருக்கலாமே! யாரோ ஒருவர் சொன்னார் என்று பழைய சைக்கிள்களாக ஏழெட்டை வாங்கி வைத்துக் கொண்டு ஒரே இடத்தில் அசையாது உட்கார்ந்து கொண்டிருந்தான். ஆனால் முன்பு அவன் தகப்பனார் இருந்த காலத்தில் குடும்பத்தைப் பற்றி துளிக்கூட கவலை யென்பதே அவனுக்கில்லாமலிருந்தது. ஆனால் இப்போது எல்லா பொறுப்பும்

அவன் தலையில் விழுந்து விடவே, வாழ்க்கையின் குரூரத்தையும், கோரத்தையும் கண்டு நடுங்கினான். ஆற்றங் கரைக்கு அப்பாலுள்ள கிராமத்தில் வாடகைப் பாக்கி ஒருவர் கொடுக்க வேண்டும். அதை எப்படியாவது வாங்கிக்கொண்டு வந்து விடுவது என்ற உறுதியில் தான் அவன் போனான். ஆனால் அவனுடைய துரதிர்ஷ்டம் அவன்தேடிக்கொண்டு போனவர் அப்போது வீட்டில் இல்லை. மாலையில் வருவார் என்று வீட்டிலுள்ளவர்கள் சொன்னார்கள். சாயங்காலம்வரை காத்துக்கொண்டிருந்தான். அவர் கொடுக்கப்போகிற பணத்தை வாங்கிக் கொண்டுபோய் இன்னென்ன செலவு செய்வது என்பதெல்லாம் திட்டம் போட்டுக் கொண்டிருந்தான். ஆனால் அவர் அப்படிச் சொல்லுவார் என்று அவனுக்குத் தெரியுமா?

மிகுந்த சலிப்புடன் வானை நோக்கிப் பெருமூச்செறிந்தான். தன் குழந்தையின் வாடிய முகத்தைக் கற்பனை செய்து பார்த்தான். ஜயாவின் அழகு சொட்டும் துயர் தேங்கிய முகம் அவனைக் கையெடுத்து வருந்தியழைத்தது. அந்த அமைதியான வேளையில், ஆற்றங்கரை மரத்தினடியில், மனம் கலங்கி, செய்வதறியாது, திகைப்புடன் படுத்துக் கொண்டிருந்தான் ரத்தினம். 'சரி, எவ்வளவு நேரம் உட்கார்ந்திருப்பது, எப்படியும் போய்த்தானே ஆகவேண்டும்' என்று எழுந்தான்.

ஏனோ மறுபடியும் தயக்கத்துடன் அங்கேயே உட்கார்ந்தான். சுற்றுமுற்றும் பார்த்தான் எட்டாக்கையில் எங்கோ மரக் கிளையிலிருந்து சிறகடித்துச்சென்றது திகிலடைந்த ஒரு பறவை. பக்கத்துப் பனந் தோப்பிலிருந்து சல சல வென்ற பனை ஓலைகளின் சப்தமும், ஒருபட்டியிலிருந்து, நாலைந்து ஆடுகள் கத்திய தொனியும் கேட்டன.

ரத்தினம், எழுந்து போகாமல் தன் கடந்த காலத்தின் வாழ்க்கையைத் தொடர்ந்து கனவு காணலானான். அந்த சென்று போன நாட்களின் எதிரொலி ஸ்பஷ்டமில்லாமல் அவன் காதில் விழுந்தாலும் அதுவே மிகவும் அற்புதமாயிருந்தது. நேற்று, நேற்று என்று காலத்தைப் பின் கடத்திக்கொண்டே போய், ஆறு வருஷங்களுக்கு முன்னால் நடந்த ஒரு சம்பவத்தில் போய் நின்றது அவன் மனம்.

அந்த நாளை நினைத்துக் கொண்டவுடன் அவன் திரேகமே ஒரு சிலிர்ப்புச் சிலிர்த்தது. ஆற்றிலிருந்து குளித்தெழும் அழகியின் முகம் போல், அவன் மனைவியின் முகம், முன்னுக்கு வந்து நின்றது. அப்போது அவன் மனைவி ஜயாவுக்கு வயது பதினாறு. யௌவனம் அவள் திரேகத்தில் பூப்பூத்து நின்றது போலிருந்த காலம் அது. அன்றொருநாள் சந்தியா வேளையில், அவள் குளித்து குங்குமமணிந்து, கோவிலுக்குப்போக தாம்பூலத் தட்டில், வெற்றிலை, மஞ்சள், குங்குமம், சூடம் முதலியவைகளை எடுத்து அடுக்கிக் கொண்டிருந்தாள். ரத்தினம் எங்கோ வெளியே போய்விட்டு வந்தவன், அதை என்னவோ சிறு குழந்தை வேடிக்கை பார்ப்பதைப்போல விளையாட்டாகக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான். திடீரென்று ஜயா திரும்பியவள் இதைக் கவனித்து விட்டாள். அவள் கன்னங்கள் வெட்கத்தால் சிவந்தன. முன்னால் சரிந்து கிடந்த கூந்தல் சுருள் அவள் கண்களை மறைத்துக் கொண்டது. ரத்தினம் விளையாட்டாக அவளைப் பார்த்துச் சொன்னான், "வரம் கொடுக்காமல் போனால் சந்நிதியிலிருந்து நகரக்கூடாது" என்று. அப்போது அவர்களுக்கு குழந்தை பிறக்கவில்லை. அவன் எதைக் குறித்துத்தான் பேசுகிறான் என்பதைப் புரிந்து கொண்ட ஜயா தன்னை மீறி எழுந்த நாணத்தால் சட்டென்று உள்ளே ஓடி விட்டாள்.

சென்றுபோன அந்த நாட்களை நினைத்துக் கொண்டவுடன் அவன் நிலை தடுமாறிப் போனான். சிலையைப்போல் அங்கேயே அசங்காமல் உட்கார்ந்திருந்தான்.

எங்கும் சலனமின்றி சப்தமின்றி அமைதி நிலவியது. சற்றுமுன் அவன் முகத்தில் வீசிய காற்றுக்கூட இப்பொது நாகாஸ்திரத்தால் கட்டுண்டு கிடப்பது போல் அசைவிழந்து தோன்றிற்று. அந்த சாந்தமான பொழுதிலே, அந்தகாரத்தின் அகண்ட கரங்கள் பூமியை அணைய ஆரம்பித்தன. சர்ப்பம் உணவை விழுங்குவது போல, மெல்ல மெல்ல இருள் உலகை விழுங்கத் தொடங்கிற்று.

"அச்சமில்லை அச்சமில்லை அச்ச
மென்பதில்லையே
இச்சகத்துளோ ரெல்லாம் எதிர்த்து
நின்றபோதிலும்"

என்ற பாட்டு தொலைவிலிருந்து அப்போதுகாற்றிலே மிதந்துவந்து ரத்தினம் காதில் ஒலித்தது. அந்தப் பாட்டை மிகவும் காரசாரமாக மகா உத்சாகத்துடன் யாரோ பாடிக் கொண்டிருந்தார்கள். திருப்பித் திருப்பி அந்த அடிகள் பாடப்படுவதை ரத்தினம் கேட்டான். மெதுவாக அந்த நாதம் தீர்க்கமாகக் கேட்பதையும் தெரிந்து கொண்டான். எழுந்து நின்று கீதம் வந்த திக்கை நோக்கினான்.

அந்த சமயத்தில் அந்த அடிகளைக் கேட்டபோது ரத்தினத்திற்கு பல எண்ணங்கள் திரண்டு வந்தன. எவன் அப்படிக் குதூகலமாகப் பாடுகிறான்? அந்தக் குரலில் எவ்வளவு திடம், எவ்வளவு சக்தி, எவ்வளவு சந்தோஷம்? "அவனுக்கு அச்சமில்லையாம். அவ்வளவு பயமில்லாத வீரனா ஒருவன் இப்போது இருக்கிறான்?"

அந்த மசண்டைப் பொழுதில் ஒரு மங்கலான உருவம் தெரிந்தது. அந்த மங்கலான உருவம் ஒரு ஜோடி மாடுகளை ஓட்டிக்கொண்டு வருவதையும் அதன் தோளில் ஓர் கலப்பை இருப்பதும் அருகில் வந்ததும் தெரிந்தது. "அச்சமில்லை. அச்சமில்லை" என்ற வார்த்தைகளை மெய்மறந்து மகா உத்சாகத்தோடு நூறாவது தடவையாக அந்தக் குடியானவன் பாடியதைக் கேட்டபோது ரத்தினத்திற்கு அந்த சங்கடமான நிலைமையில் கூடச் சிரிப்பு வந்து விட்டது.

"யாரப்பா நீ? எங்கே போகிறாய்?" என்று ரத்தினம் அவனைக் கேட்டான்.

அந்தக் குடியானவன் சட்டென்று நின்றான். அவன் பாட்டைக் கலைத்து விட்டதில் கோபமடைந்து விட்டவன் போல் தோன்றினான். அந்த மங்கலான வெளிச்சத்தில் அவன் முகம் கருங்கல் விக்ரகம் மாதிரி இருந்தது. ரத்தினத்தைப் பார்த்து அவன் "வூட்டுக்குப் போறேன். ஏன்? வழி தெரியாமே இங்கே நின்னுக்கிட்டு இருக்கிங்களா? உங்களுக்கு எங்கே போவணும்?" என்றான்.

"அப்பா எனக்கு வழி தெரியும். ஆனால் 'அச்சமில்லை' என்று பாடினாயே. உனக்கு அந்தப்பாட்டில் இரண்டு அடிக்கு மேல் தெரியாதோ?" என்று கேட்டான் ரத்தினம். அவன் 'களுக்' கென்று சிரித்து விட்டான்.

"இல்லிங்க நம்ப பயலுக்கு பள்ளிக் கூடத்திலே இந்தப் பாட்டு சொல்லிக் கொடுத்தாகளாம். அதே அவன் அடிக்கடி வூட்டுலே பாடிக்கிட்டு இருப்பான். அது நல்லா எனக்கு யாவுகம் இல்லே. அதாங்க..." என்று சொல்லிச் சிரித்து விட்டான். அந்தச் சிரிப்பில் வணக்கமும் குழைவும் இருந்தது.

மறு நிமிஷம் மாடுகள் முன்னே செல்ல குடியானவன் பின்னே சென்றான்.

"நான் போரேனுங்க. நாளியாச்சு. மாட்டுக்குத்தீனி வைக்கணும், தண்ணி காம்பிக்கணும். பொஞ்சாதி பிள்ளைங்கள் எல்லாம் காத்துக்கிட்டு இருப்பாக" என்று சொல்லிக்கொண்டே அவன் அகன்றான்.

ரத்தினம் அவன் சென்ற வழியே பார்த்துக்கொண்டு ஒரு கணம் நின்றான். சில விநாடிகளுக்கெல்லாம் இதுவரை தடைப்பட்டிருந்த குரல் இச் சகத்துளோ ரெல்லாம் எதிர்த்து நின்ன போதிலும் அச்சமில்லை" என்று மறுபடியும் எழும்பி மறைந்தது.

ஆஹா! இந்தக் குடியானவனுக்கு என்ன உற்சாகம், என்ன திருப்தி? அவன் பரம ஏழை போலத்தான் தோன்றுகிறான். ஒரு முழத்துண்டுதான் கட்டிக் கொண்டிருக்கிறான். ஆனால் அவன் முகத்தில் ஒரு ஜோதியல்லவா வீசுகிறது. அவனுக்கு அரைக்காணி நிலம்கூட இருக்குமோ என்னமோ? ஆனால் அவன் தன்னை மறந்தும் பாடிக் கொண்டல்லவோ, போகிறான். அவனுக்கு மனைவி குழந்தைகள் வீடு வாசல், குழந்தைகள் அவனுக்காகக் காத்துக் கொண்டிருப்பார்களாம். வேகமாக வீட்டுக்குப் போக வேண்டுமென்றல்லவோ, அவன் ஆசைப்படுகிறான்.

இதை எல்லாம் நினைத்துத் தன்னுடைய நிலைமையையும் அவன் ஒப்பிட்ட போது

ரத்தினத்திற்கு துக்கம் தாங்க முடிய வில்லை. அந்தக் குடியானவன் மீது ஒரு பொறுமை கூட ஏற்பட்டது வாஸ்தவம் தான். அவன் மனைவி குழந்தையைப் பற்றிச்சொன்னபோது ஜயாவும் குழந்தையும் மனக்கண் முன் வந்து நின்றார்கள். அவனைப் பெருமூச்செறியச் செய்தார்கள்.

ரத்தினம் சில நிமிஷங்கள் மலைபோல் நின்றான். திடீரென்று ரத்தினம் உரக்கச் சிரித்துவிட்டு மேற்கு நோக்கி நடந்தான்.

ஜயா ஜன்னலின் வழியாக கொடிய காரிருளைப் பார்த்தாள். அவள் மனம் 'திக்திக்' என்று அடித்துக்கொண்டது. 'ஏன் அவர் வரவில்லை?' என்று மறுபடியும் அவள் மனதில் கேள்வி எழுந்தது. எதிரே தரையில் தூங்கிக்கொண்டிருந்த குழந்தையின் முகத்தைப் பார்த்தாள். பார்த்துவிட்டு எதிரே இருந்த கொடிய இருட்டைப் பார்த்தாள். பத்துமணி ஆகி விட்டது. அவள் உடம்பு நடுங்கிக்கொண்டிருந்தது. அவள் ஹிருதயத்தை பயம் செம்மட்டி கொண்டு 'படார் படார்' என்று தாக்குவதை உணர்ந்தாள்.

அப்போது 'படார்' என்று வாசற் கதவை வேகமாக இடிக்கும் சத்தம்.

"ஜயா! கதவைத் திற!"

ஜயா ஓடிப்போய் கதவைத் திறந்தாள்.

"ஏன் இத்தனை நாழி? எங்கே இப்படிப் போயிருந்தீர்கள்?" என்று படபடப்புடன் கேட்டாள் ஜயாரத்தினம் நடுங்கிக் கொண்டிருந்த ஜயாவின் கரங்களைப் பிடித்துக்கொண்டு, "ஏன் இவ்வளவு நடுக்கம்? நான் கொஞ்சம் முந்திப் பிந்தி வந்தால் ஏன் இவ்வளவு அமர்க்களம்? என்னை பூச்சாண்டி பிடித்துக்கொண்டுபோய் விடுமா?" என்றான்.

ஜயாவின் உதடுகளில் அசைந்து முகத்தில் மந்தஹாஸம் உண்டாயிற்று. ரத்தினத்தின் கண்களில் தோன்றிய ஒளி அவன் மனதிலுள்ள கவலை இருட்டை ஒரு கணத்தில் போக்கிவிட்டது.

"ஜயா நான் ஸைக்கிள்களை விற்கப் போகிறேன்!"

"ஸைகிள்களையா ஏன்? அதை விற்று விட்டு?"

"விற்றால் நூறு ரூபாய்க்கு மேல் கிடைக்கும். அதை எடுத்துக்கொண்டு கிராமத்துக்குப் போவோம்"

"அங்கே போய்?"

அங்கே நமக்கு இரண்டு காணி நிலம் இருக்கிறதல்லவா? அது கவனிப்பாரில்லாமல் வீணாய்த்தானே போகிறது. அதை உழுது சாகுபடி செய்யலாமல்லவா?"

"நூறு ரூபாய் எதற்கு?"

"மாடு கலப்பை இதல்லாம் வாங்கி விடுகிறோம், நமது கிராமத்துக்குப் போவதற்கும் ரயில் சார்ஜு வேண்டுமல்லவா?"

"வேண்டும்."

"இங்கே சைகில்களைக் கட்டிக்கொண்டு பிறர் கையை எதிர்ப்பார்த்து பட்டினி கிடப்பானேன்? கிராமத்துக்குப் போனால் நாம் ஒருவர் கையையும் எதிர்பார்க்க வேண்டாம். நம் கையால் உழைத்து நாம் சாப்பிடலாம். பிறர் கையை எதிர்பார்க்கிற வரையில் பட்டினி கிடக்கவேண்டிய அபாயம் நிச்சயம் வரும். ஜயா! உனக்குக் கிராமத்திற்கு வருவதற்கு சம்மதந்தானே."

"நீங்கள் எங்கே போனாலும் நான் கூட வர சம்மதந்தான். கேட்பானேன்?"

"அப்படியானால் நாளை ராத்திரி வண்டிக்குப்போக சம்மதந்தானே?"

"ஏன்? நாளைக் காலையிலேயே புறப்பட்டு விடலாம். சாயங்காலமே ஊருக்குப் போய்ச் சேர்ந்து விடலாம்."

ரத்தினம் ஜயாவின் முகத்தைப் பார்த்தான். சந்திர பிம்பம் போன்ற ஜயாவின் முகம் ஹிதத்துடன் கூட அவனுக்குக் கொஞ்சம் கர்வத்தையும் கொடுத்தது.



பேராசைப் பெரு நஷ்டம்.

(ஆ. வே. ஜேயராமன்)

நந்தகோபாலென்னும் நலங்கொள் வணிகனொருவன்,
அந்திப்பொழுதினிலே அடுத்தவூர் சென்றுவிட்டு,
தங்காப் பணப்பையைத் தாங்கிவூர் ஏகுகையில்,
அங்கோர் குளம் கண்டு, கரையிலே பையை வைத்து,
தனக்குள்ள கர்மாவை முடித்துத் திரும்புகையில்
தனத்தினை மறந்திட்டான், வீடடைந்ததும் அதை நினைத்து,
கனத்த தொந்தி குலுங்கிட ஓடோடியும் வந்தனனே, ஆனால்,
மனதினில் திகில் கொண்டான் வைத்த பை காணாமல்.
இரவினில் உறக்கமில்லை, பகலினில் பசியுமில்லை.
சுரமும் கண்டது, சுழன்றது அவன் சிரம்.
" பணத்தினைக் கொடுப்போருக்குப் பாதி கொடுப்பேன் "
கணத்தினில் கொணரும்" எனப்பறையடித்தா னெங்கும்.
பறையடித்த வொலி கேட்ட குணமிக்க முருகனென்பான்,
மறைத்திடாமல் உண்மை விளம்பலுற்றான் வணிகனிடம்.
" கழனியினின்றும் திரும்புங்கால் கண்டெடுத்தேன் இப்பையை
வழ வழத்த புல் தரையில் யான் காண இருந்தது, இதானா ?"
என்றேதான் கொணர்பையை முன் வைத்தான்.
கண்டவன் வணிகனும் கண்டது பேராசை அவன்பால்,
கண்டெடுத்தவனுக்குப் பாதி கொடுப்பதா ? அநியாயம்,
" என்பணம் என்னிடம் கொடுக்க இனாமா ? நல்லதிது
என் பணம் திருடியதற்கு எடுப்பேன் உன்மேல் வழக்கு,
நல்லது பிழைத்தாய் நீ, தக்கணமே ஓடுவா " யென்றே
அல்லாது சொல்லி அடித்துத் துரத்தினானே.
வணிகனின் அடாது கண்டு உரங்கிடா முருகனும், நேரே
அணுகினன் எல்லோருக்கு மோர் நியாயம் கேட்க.
மன்றத்தில் குழுமினர் ஊராரெல்லோரும்.
அன்றைக்கு எழுதிப்போன தர்மம் நிலைக்குமோவென
ஏங்கினன் ஏழை முருகனும், ஆங்கு வந்தான்,
ஆங்கார ஓங்காரத்துடன் அணியணிந்த வணிகனும்.

மனுநீதி பிறழாது யான் உரைப்பேன் நீதியென
அனுபோகமுள்ள நீதிபதியும் மன்றம் வந்தான்.
ஏறினான் சாட்சிக் கூண்டில் ஏழை முருகனும்,
கூறினான் தன்குறையை எல்லோரறிய அவனும்.
கேட்டனன் நீதிபதி ஏழைமுருகன் சொல்லை,
வாட்டமுற்ற அவன் முகம்பார்த்து ஏங்கினரெல்லோரும்.
நந்த கோபாலனென்னும் நலங்கொள் வணிகனும்,
வந்தனன் பையுடன் வாக்குமூலங் கொடுக்க.
“ குளக்கரையில் பையை வைத்ததுமெய்யே,யான்
அளவில் பாதியை இனும்கூறியதும் மெய்யே,
ஆயிரம் பொற்கழஞ்சில் ஐந்நூறு கண்டேன்,
ஆயிரத்தில் பாதியை அவன் எடுக்கவே,யான்
இன்னும் இனும்கொடுக்க இயலுமோ என்னல்,
மன்னுயிர்கார்க்கும் மகிபா சொல்வாய் நியாயம்'',என்றான்.
நீதிபதியும் பார்த்தான் எது உண்மையென்று,
நீதியைச் சொல்வதில் தப்பொன்று வந்தால்,
மாபெரும் பாவம் தன்தலைமேல் விழுமென்று
தாமதித்தான் நீதியைச் சொல்வதில் சிறந்தோன்.
துலாக்கோல் பிடித்தவன்கண் சட்டென விழுந்தது,
துலாக் கோலுதவியால் பிழைப்பவன் பையின்மேல்,
எடுத்தனன் அப்பையை “ எவ்வளவு கொள்ளு”மென்றான்.
“ அடுத்தது ஐந்நூறு கழஞ்சுப்பொன் கொள்ளு''மென்றான்.
மனத்தினில் ஈரமில்லா நெஞ்சினன் வணிகன்.
சந்தேகம் வந்தது சரியோ அவன்சொல்வதென்று,
அந்தக்கணமே அவன் இன்னொரு ஐந்நூறையும்,
வணிகனின் பையினில் போட்டனன், ஆனல்
மணியொளிர் இருநூறு கழஞ்சுகளே கொண்டது
கண்டனன் நீதிபதி வணிகனின் வஞ்சத்தை,
கொண்டனன் கோபம் அப்பேராசைப் பேயிடம்,
ஆயிரம் கொள்ளும் உன்பை, ஆனல் இது
ஆயிரத்தின் கீழ் மூந்நூறு குறைந்தது
இதுவன்று உன்பை, நீசொல்வது முற்றும்பொய்,
என்றே அப்பையை மெய்கூறிய பரிசிற்காக
வென்ற முருகனிடம்கொடுத்து, “ ஆயிரம் இருந்தால்
அது உனக்களிக்கப்படும்,'' என்றனன் மதிவல்லோன்.

தமிழ்ப் படங்கள் வேண்டும்

(வே. சு. ராமகிருஷ்ணன்)

தமிழ்ப் படங்கள் பேரில் ரொம்பப் பேர்கள் கெட்ட அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள். சில இளைஞர்களுக்குத் தமிழ்ப் படங்கள் பேரில் இருக்கிற கோபத்தில் சில புரட்சிகரமான யோசனைகளெல்லாம் கூறுவதையும் கேட்கிறோம். 'ஈசுவரா! எங்களை இந்தத் தமிழ்ப் படங்களிலிருந்து காப்பாற்றமாட்டாயா?' அல்லது 'இந்த தமிழ் படம் பிடிக்கிறவர்கள் தலையில் இடி விழாதா?' என்ற பிரார்த்தனைகளெல்லாம் இப்போது மறைந்து போய், "தமிழ்ப் படங்களை நெருப்பில் போட்டுப் பொசுக்கு" "அந்தக் கொட்டகைகளை எல்லாம் இடி" என்பது போன்ற ஆக்ஷேபகரமான பலாத்கார மணம் கமழும் கூக்குரல்கள் எழும்புகின்றன. இந்தக் கூச்சல் ஹிம்சையை அடிப்படையாகக் கொண்டது என்பதற்காக மட்டும் நான் இதை எதிர்க்கவில்லை என்ன காரணத்திற்காக இவர்கள் தமிழ்ப் படங்களை எதிர்க்கிறார்களோ அந்த காரணம் தவறானது என்பதற்காகத்தான். தமிழ்ப் படங்களை எதற்காக எதிர்க்கிறார்கள்?

முக்கால் வாசி தமிழ் படங்கள் ஆபாஸமாய் இருக்கின்றன என்பதற்காக. 'ஆபாஸம்' என்ற பதத்தில் சங்கீதக் கொலை, நடிப்புக் கொலை, கண்ணுக்கு உபத்திரவ மூட்டும் காட்சிகள், மூளையில்லாத சம்பாஷணைகள், கன்றாவி டைரக்ஷன்—இந்த அம்சங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்திருப்பதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். இப்படி பெரும்பான்மையான தமிழ்ப் படங்கள் ஆபாஸப் படங்களாயிருப்பதால், ஆபாஸத்தையும் தமிழ் படத்தையும் இவர்கள் பிணைத்து விட்டார்கள். தமிழ்ப் படம் என்றால் ஆபாஸம்; ஆபாஸம் என்றால் தமிழ்ப் படம் என்று இவர்கள் அகராதியில் அர்த்தம்.

இருக்கட்டும். தமிழ்ப் படம் ஆபாஸமாயிருக்கிறதென்பதற்காகவா தமிழ்ப் படங்களை வேண்டாமென்கிறார்கள்? அதற்காகவா இப்படி கோபதாப வீராவேசமெல்லாம்? இவ்வளவு நாட்களாக, காலரா, பிளேக், மெனஞ்சபீஸ் முதலிய சிறிய விஷயங்களையெல்லாம் கண்டு எப்படி பயப்படாமல் இருப்பது என்று கற்றுக்கொண்ட பிறகும் கூடவா இந்த சினிமா ஆபாஸங்களைக் கண்டு நாம் மிரளுவது?

தமிழ்ம் படங்களிலுள்ள ஆபாஸத்தையே பார்த்து இவர்களுக்குத் தாங்க முடியவில்லையே. ஆபாஸம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து நல்ல ஸ்திதிக்கு வரும்போது என்ன செய்யப் போகிறார்கள்?

தமிழ்ப் பட விரோதிகளின் புத்திசாலித்தனத்தை என்னவென்று சொல்ல! "படங்கள் ஆபாஸமாயிருக்கிறது. ஆகையால் அவை வேண்டாம்" என்று சொல்கிறார்கள். எப்படியிருக்கிறது?

'கரும்பு தித்திக்கும். அது எனக்கு வேண்டாம்" என்று எந்தக் குழந்தையாவது சொன்னால் அது குழந்தையல்ல, கோட்டான் என்று தானே சொல்வீர்கள்? இன்னும், "அந்தப் புஸ்தகம் நன்றாயிருக்கிறது. ஆகையால் நான் அதை வாசிக்கமாட்டேன்" என்று யாராகிலும் சொல்வார்களா? அதுபோலத்தான் இருக்கிறது ஆபாஸப் படத்தைப் பார்க்கமாட்டேன் என்று சொல்வதும்.

என்னைக் கேட்டால், ஆபாஸம் தமிழ்ப் படத்தில் இருக்கிறது என்ற ஒரு காரணத்திற்காகவே தமிழ்ப் படங்களை எப்போதும் நிலைபெறச் செய்ய வேண்டும் தமிழ்ப் படம் எப்போதும் உலகத்தில் இருக்க வேண்டும். அதைவிட, ஆபாஸம் அவைகளில் முக்கியமாய் இருக்கவேண்டும். இப்படிப் பட்ட ஆபாஸப் படங்களின் முக்கியத் துவத்தையும் உபயோகத்தையும் நீங்கள் தெரிந்து கொண்டு விட்டால், 'ஆண்டவனே! இந்த பூமியையே அழித்தாலும் அழித்து விடு. ஆனால் இந்த படங்களை மட்டும் அழித்து விடாதே. ஏனென்றால் மறுபடியும் புது உலகம் சிருஷ்டிக்கப் படும்போது இது போன்ற 'திவ்யமான ஆபாஸப் படங்கள்' உண்டாகுமோ உண்டாகாதோ. ஆகையால் இந்தப் படங்களை வைத்து விட்டு உலகத்தை வேண்டுமானால் அழித்து விடு" என்று என்னுடன் பிரார்த்தனை செய்வீர்கள்.

ஆமாம்; படங்கள் நமக்கு அவ்வளவு முக்கியம். நிழலின் அருமை வெயிலில் போனால் தெரியும் என்று சொல்வார்களல்லவா, அதைப்போல் இப் படங்களின் அருமை அத்தகைய படங்கள் உலகத்தில் இல்லாமல் போனால்தான் தெரியும். தமிழ் நாட்டில் உதவாக்கரைப் படங்கள் இல்லையானால் என்ன ஆகுமென்று ஒரு கணம் கற்பனை செய்து பாருங்கள். ஆஹா! என்ன பயங்கரம்? எத்தகைய புரட்சிகளும், அல்லோல

கல்லோலங்களும் உண்டாகும் என்பதை சற்று சிந்திக்கும்போது நமக்கு நடுக்கம் உண்டாகிறது.

ஐயோ! ஆபாஸப் படங்கள் இல்லையானல் சினிமா 'கிரிடிக்கு'கள் என்ன கதி ஆவார்கள்? பாவம்! இந்தக் கிரிடிக்குகளுக்கு இது வரை மிகவும் ஒத்தாசையாக இருந்து வந்தன இந்தப் படங்கள். அந்தப் படங்களைக் கண்ட துண்டம் செய்யவேண்டியது; அல்லது புகழ வேண்டியது இவர்கள் வேலை. எல்லா படங்களையும் கிண்டல் செய்வது என்று முறையை இவர்கள் வைத்துக் கொண்டிருக்கிருர்களாக்கும் என்று நான் அடிக்கடி சந்தேகப்பட்டதுண்டு. ஆனல் அப்படி ஒரே மாதிரியாய்க் கண்டனம் செய்து கொண்டிருந்தால் சலிப்பு உண்டாக்கி விடும் என்று இரண்டு படங்களைத் தாக்குவது, அதற்குப் பிறகு இரண்டு படங்களை புகழ்வது என்று ஒருமுறை வைத்துக் கொண்டிருப்பதாக ஒருவர் சொன்னர். அந்த முறைகூட இவர்களுக்கு இல்லை என்று மற்ருெருவர் சொல்கிருர். யார் எப்படிச் சொன்ன போதிலும், 'கிரிடிக்' குகள் ஆபாஸப் படங்களுடன் உறவு வைத்துக் கொண்டிருக்கிருர்களென்பதில் சந்தேகமில்லை. 'கிரிடிக்'குகள் எழுதும் தூஷணைகளையோ, பாராட்டுகளையோ பொருட்படுத்தாமல் இந்தப் படங்கள் பொறுமையுடன் இருந்து அவர்கள் இப்படிக் காலம் தள்ளுவதற்கு ஒத்தாசை செய்தன. இப்போது, ஆபாஸப் படங்கள் இல்லை என்ருல்?

'கிரிடிக்'குகள் அப்புறம் எதை எதிர்ப்பார்கள்? எதைப் புகழ்வார்கள்? அப்புறம், வேலை யில்லாத் திண்டாட்டம் தான். இந்தக் காலத்தில் எங்கு பார்த்தாலும் வேலையின்மையும், வறுமையும் தாண்டவமாடும்போது, இந்தக் 'கிரிடிக்'குகளைக் கூட இந்த 'வேலையில்லாப் படுகுழியில்' தள்ளவேண்டுமோ? வேண்டாம், வேண்டாம். ஆபாஸத் தமிழ் படங்கள் இருந்துவிட்டுப் போகட்டும்.

தாங்கள் இதுவரை தாக்கி வந்த படங்கள் தமிழ் நாட்டில் இனிமேல் இல்லை என்று தெரிந்து கொண்டவுடன் முக்கால் வாசிக் 'கிரிடிக்குகள்' வேறு ஏதாவது வேலை செய்ய ஆரம்பிப்பார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களல்லவா? ஆம்! சினிமா உலகத்திலிருந்து அரசியல் உலகத்திற்கு விஜயம் செய்வார்கள் அங்கு யாரை எதிர்ப்பது? காங்கிரஸ் மந்திரி சபையை எதிர்க்கலாம். அவர்கள் கோபித்துக்கொள்ள மாட்டார்கள். ஆனல் இந்த பிரகிருதிகள் அத்தோடு நின்று விடுவார்களா? அவர்கள் பேஞு பல அரசியல் பிரச்னைகளையும் கிளறிக் குளறுபடி செய்யும். சினிமாவைத் தாக்கித் தாக்கி ஒரு ஆச்சரிய மானபாணியை அவர்கள் கற்றுக்கொண்டிருக்கிருர்கள். எந்த விவாதத்தையும் அவர்களுக்கு கண்ணியமாகவும் கௌரவமாகவும் நடத்தத் தெரியாது. இது ஒரு பழக்கத்தால் ஏற்பட்ட பலவீனம் தான். எல்லா மனிதர்களுக்கும் தான் பலவீனம் இருக்கிறது. இதில் தப்பு ஒன்றும் இல்லை. ஆனல் 'கிரிடிக்'குகள் இந்தப் பலவீனத்துடன் அரசியல் ஆராய்ச்சியில் ஈடுபடும்போது எதிர்பாராத வருந்தத்தக்க வில்லங்கங்கள் உண்டாகுமே அதற்கென்ன செய்வது? அரசியலில் இவர்கள் தலையிடப் போய் குழப்பங்களும் கலகங்களும் உண்டாகி விட்டால் நிலைமையைச் சமாளிப்பது சர்க்காருக்கு எவ்வளவு கஷ்டமாயிருக்கும்?

ஆகையால், இந்த மாதிரிக் கஷ்டங்களெல்லாம் வராமலிருக்க வேண்டுமானல் ஆபாஸப் படங்கள் அவசியம் இருக்கவேண்டும் என்பது தெளிவாகிறது. இப்படிக் கலவரம் வராமல் தடுக்க ஆபாஸப் படங்கள் போதுமான அளவு இருக்கிறதா என்று பார்க்கவேண்டியது சர்க்கார் கடமை. இந்தக் கடமையைச் செய்வதில் அவர்களுக்கு அதிக சிரமம் இல்லை. ஏனென்ருல் வேண்டிய அளவு இம்மாதிரிப் படங்கள் இருக்கின்றன; பல படங்கள் வேகமாகத் தயாராகி வருகின்றன. ஆனல் அரசாங்கம் இந்த வழியில் ஏதாவது செய்ய வேண்டுமென்று ஆசைப்பட்டால், 'திவ்யமான ஆபாஸப் படம்' ஒன்றைத் தயாரித்துப் பட முதலாளிகளுக்கு வழி காட்டலாம்.



விமோசனத்தில் ஒரு காட்சி

ஸ்வர்ணலதா

ஒரு ஜமீந்தார் குடிவெறியால் சொத்தை இழந்து, மனைவி, வீடு வாசலைத் துறந்து பைத்தியக்காரனாகிறான். கடைசியில் தவறை உணர்ந்து தன்னைத் திருத்திக் கொள்கிறான். இதுதான் ஸ்வர்ணலதாவின் கதை. இது மாதிரி குடிவெறியாலும் கெட்ட நடத்தையாலும் கெட்டுப்போய் மீண்டும் யோக்கியர்களானவர்களுடைய கதைகளை எவ்வளவு தடவை திரையில் பார்த்திருக்கிறோம்? பார்த்து அலுத்துப்போயிருக்கிறோம்? இந்தக் கதையைத் தவிர வேறு நல்ல கதையே அகப்படாதா?

குடிப் பழக்கத்தைக் கண்டித்து இம்மாதிரிப் பிரசாரப் படம் பிடிக்க விரும்புவர்கள் சமீபத்தில் பிரதம மந்திரி கூறியதை ஞாபகம் வைத்துக்கொள்வது நல்லது. மதுவை ஒழித்த சேலம் போன்ற ஜில்லாக்களில் மதுவிலக்கு சம்பந்தமான படங்களைக் காண்பிப்பது உசிதமானதல்ல. அவர்களை அப்பழக்கத்தையே மறக்கச் செய்யவேண்டியதிருக்க, மதுவிலக்குப் படங்கள் மூலம் அந்த விஷயத்தையே ஞாபகப் படுத்தக்கூடாது. கள்ளரக்கனை ரேழியில் தூக்கிப் போட்டாய் விட்டதே. இதைப்பற்றி பட முதலாளிகள் சந்தேகமே படவேண்டியதில்லை.

இந்த மதுவிலக்குக் கதை சில ருசிகரமான அங்கங்களுடன் சேர்ந்து ஸ்வர்ணலதாவாக வெளி வந்திருக்கிறது. ஜமீந்தார் கல்யாணம், முடிவில் ஜமீந்தார் மனைவியைச் சந்தித்தல், இந்த இரண்டு கட்டங்களிலும் கற்பனையைச் சிறிது உபயோகித்திருக்கிறார்கள்.

ஆனால் இந்த இரண்டு கட்டங்களிலும்தான் அதிகமாகப் பிழைகள் நேர்ந்து விட்டன. ஸ்வர்ணலதா வளர்ப்புத் தாய் கோபித்துக்கொண்டாள் என்பதற்காக வீட்டை விட்டு ஓடி தற்கொலை செய்துகொள்ளப் போனாள் என்று ஒரு சம்பவத்தைப் புகுத்தியிருக்கிறார்கள். ஸ்வர்ணலதா பொறுமைசாலி, கஷ்ட நிஷ்டூரங்களைச் சகிப்பவள், குற்றங்களை மன்னித்து மறப்பவள் என்பது அவள் மண வாழ்க்கையிலிருந்து தெரிகிறது. அப்படிப்பட்டவள் தாயார் கோபித்துக் கொண்டாள் என்பதற்காக வீட்டை விட்டு ஓடினாள் என்பது நம்பக்கூடியதாய் இருக்கிறதா? இன்னும், அவள் ஜமீந்தாருடன் ஓடிப் போய் விட்டாள் என்பது அவளுக்கு நிச்சயம் ஓர் மறக்க முடியாத களங்கத்தை உண்டாக்குகிறது. மனைவி வார்த்தையைக் கேளாமல், ஜமீன்தார் விருப்பப்படி அவள் தந்தையே ஸ்வர்ணலதாவைக் கல்யாணம் செய்துகொடுத்தார் என்று கதையை அமைத்திருந்தால் நன்றாயிருக்குமல்லவா?

அனாதாலயத்திற்கு வந்து சேர்ந்த பயித்தியம் பிடித்த கணவனை ஸ்வர்ணலதா அடையாளம் தெரிந்துகொள்கிறாள். உடனே வீரிட்டு அழ ஆரம்பித்து, "ஐயோ! என்னைத் தெரியவில்லையா? நான் தான் ஸ்வர்ணலதா" என்று கதறுகிறாள். உடனே சோமுவுக்கும் பைத்தியம் தெளிகிறது. இங்கே பாருங்கள், கணவன் பைத்தியம் பிடித்து அலுத்துக் களைத்து அன்ன ஆகாரமின்றி அங்கே வந்து சேருகிறான். அவனுக்கு ஏதாவது ஆகாரம் கொடுத்துவிட்டு ஓய்வு கொடுக்கவேண்டாமா? ஸ்வர்ணலதாவுக்கு பிரமை பிடித்துப் போய் ஒன்றும் செய்யத் தெரியவில்லை என்று வைத்துக்கொண்டாலும், அருகிலிருந்த நர்ஸ்கள் என்ன செய்கிறார்கள்? கப்சிப் என்று பேசாமல் நின்றுகொண்டிருக்கிறார்கள்! நமது ஆஸ்பத்திரி நர்ஸ்கள் மாதிரியே இயற்கையாய் நடித்ததற்காக நாம் அவர்களைப் பாராட்டவேண்டும்.

பைத்தியக்காரன் சுயநினைவை அடைவது லகுவான காரியமல்ல. பாட்டுக்கள், படங்கள், சம்பவங்கள் இவைகளைக் கொண்டு பயித்தியம் பிடித்தவர்களை பழைய விஷயங்களை நினைவு கூரும்படி செய்து சுய நினைவுக்குக் கொண்டுவரவேண்டும்.

இவ்வளவு தூரம் சொன்ன பிறகு, ஸ்வர்ணலதாவின் தனிச் சிறப்பைக் கவனிக்கவேண்டும். ஸ்வர்ணலதா ஒரு 'கிண்டல் படம்.' அது அயோக்கியத்தனத்தையும் குதர்க்க வாதத்தையும் நையாண்டி செய்கிறது. குடிகார சோமு வாய்ச்சொல் வீரர்களை நையாண்டி செய்கிறான். ஸ்திரீகள் முன்னேற்றம் என்ற பேரால் நடைபெறும் பிற்போக்கைச் காட்டிக்காட்டி கேலி செய்கிறான். குதர்க்க வாத மகாநாடுகள், குருட்டு வைதீகம் ஒன்றும் அவன் அம்பிற்குத் தப்பவில்லை.

கடைசியாக நடிப்பைப்பற்றி சில வார்த்தைகள் ஆம். ஒய். வி. ராவ் நடிக்கும்போது, டைரக்ட் செய்யும்போது, அதைப்பற்றி அதிகம் சொல்வானேன்? ஒய். வி. ராவிலிருந்து ரமணி வேஷம் தாங்கிய சிறுவன் வரை எல்லோரும் மிகவும் இயற்கையாய் நடிக்கிறார்கள். பாட்டுப் பாடத் தெரிந்தால்தான் கதாநாயகனாக இருக்கலாம் என்ற விதியை உடைத்தெறிந்து நடிப்பின் சிறப்பை நிரூபிக்கிறார் ஒய்.வி. ராவ். ஸ்வர்ணலதாவாக நடித்த ரங்கநாயகியின் நடிப்பில் ஜீவன் இருக்கிறது. ஆனால் நளினம் இல்லை. ஊக்கம் இருக்கிறது. ஆனால் உயர்வு இல்லை. இருந்தாலும், கூடிய சீக்கிரத்தில் சிறந்த நடிகையாவதற்கு வேண்டிய அறிகுறிகள் இந்நடியிடம் இருப்பதைக் காண்கிறோம்.



மால பில்லாவில் ஸ்ரீமதி காஞ்சனமாலா



ராதாகிருஷ்ணாவில் கம்ஸன்